இந்தியாவும்

இஸ்லாமியத் தியாகிகளும்

இஸ்லாமிய குறிப்புகள்

பொருளடக்கம்

தொகுப்பு

மவ்லவீ, ஹாஃபிழ், காரீ, ஹாஜீ

பேராசிரியர். **மு. முஹம்மது பஸீம் தாவூதீ பாஸில்ரஷாதீ**

தலைமை இமாம், ல்முஹம்மதிய்யா பள்ளிவாசல், திருச்சி-8.

தலைவர், ஸபீலுல்-உலமா உயர் பணிஇயக்கம், நம்புதாளை.

முன்னாள் பேராசிரியர், தாவூதிய்யா அரபுக்கல்லூரி, ஈரோடு.

முதற்பதிப்பு : ஹிஜ்ரி 1425, கி.பி. 2004
இரண்டாம் பதிப்பு : ஹிஜ்ரி 1426, கி.பி. 2005

நன்கொடை : ரூபாய் 15.00

கிடைக்குமிடங்கள்:

அல்-முஹம்மதிய்யா பள்ளிவாசல்
தஞ்சை ரோடு, திருச்சி - 620 008.
✆ 98653 47867, 0431-2202796

ஸபீலுல்-உலமா உயர்பணி இயக்கம்
நம்புதாளை - 623 403, முகவை மாவட்டம்.
✆ : 984561-253204.

மவ்லவீ, ஹாஃபிழ், காரீ-ஹாஜி **பீ.எம். முஹம்மது ரஃபீக் தாவூதீ**
இமாம்-கீழமுஹல்லம் பள்ளிவாசல், ஏழாம் தெரு,
ஏர்வாடி, நெல்லை மாவட்டம்.
✆ : 984637-240123.

மவ்லவீ, ஹாஃபிழ், காரீ **முஹம்மது புகாரீ தாவூதீ**
இமாம்-ஜமுஆ பள்ளிவாசல்,
கொளத்துப் பாளையம்-P.O.
தாராபுரம் - ஈரோடு மாவட்டம்.

மற்றும் அனைத்து நூல் நிலையங்களிலும்

Jamalee Art Gallery, Cell: 98424-64426, 98420-10735

என்னை ஈன்று வளர்த்து உயர் நிலைக்கு ஆளாக்கிய எனது பாசத்திற்கும், கண்ணியத்திற்கும் உரிய எனது அன்பு பெற்றோர்களின்....

ஆசியுரை

அல்ஹம்துலில்லாஹ்...,

"படிச்சவனுக்கு பணப்பெட்டி ஓதுனவனுக்கு ஓலபொட்டி" *(கத்தும், ஃபாத்திஹா மவ்லிது ஓதுபவர்களுக்கு ஓலை பொட்டியில் தேங்காய் சோறு தரப்படுவது வழக்கம்)*

என்று எங்களூர் மக்களிடத்தில் பரவலாகப் பேசப்பட்டுத் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் அதிகம் கவனம் எடுத்துக் கொண்டிருந்த காலத்தில் எங்கள் மகனை ஹாஃபிழாகவும், ஆலிமாகவும், ஃபாஸிலாகவும், காரீயாகவும் ஆக்கிப்பார்க்கக் கனவு கண்டோம். அல்லாஹ் எங்கள் கனவை நனவாக்கினான். மேலும் எங்கள் பரம்பரையிலே முதன் முதலில் புனித ஹஜ் செய்யும் வாய்ப்பையும் நஸீபாக்கினான். தமிழகத்தின் தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றான ஈரோடு தாவூதிய்யா அரபுக் கல்லூரியில் கல்வி பயின்று பட்டம் பெற்று பின்னர் அங்கேயே பலவருடங்கள் பேராசிரியராகவும் சுமார் 18 வருடமாகத் திருச்சி தஞ்சைரோடு அல்முஹம்மதிய்யா பள்ளிவாசலில் ஹாஃபிழாகவும், தற்போது அதே பள்ளியில் தலைமை இமாமாகவும் இப்படி பல நிலைகளிலும் அல்லாஹ் அந்த நிஜத்தை சிறப்பாக்கினான். எங்களது பிள்ளையின் பின்னால் நின்று தொழும் போதும், அவர் சொற்பொழிவுகளைக் கேட்கும் போதும் ஆனந்தம் அடைந்த நாங்கள், இவரது எழுத்து நூல் வடிவம் பெறுவதை நினைத்து பேரானந்தம் கொள்கிறோம். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர் சேவையை அங்கீகரித்து, சமுதாயத்திற்கு நற்பயன் கிடைக்க வாழ்த்தி நெஞ்சம் நிறைந்து துஆ செய்கிறோம். இவர் மூலம் முழு மனித சமுதாயத்திற்கும் நற்பயன் தருவானாக, இன்னும் பல உயர்வுகளை அருள்வானாக.

அன்புடன்

ஹாஜி M. முஹம்மது அபூபக்கர்,
ஜனாபா M. மஃஷூகா ரஹ்மான் பீவி,
1/102, மேற்குத் தெரு, நம்புதாளை.

என்மீது அன்பும், பாசமும்கொண்ட எங்கள் அல-முஹம்மதிய்யா பள்ளிவாசலின் பரம்பரை முத்தவல்லி ஹாஜியார் அவர்கள் வாழ்த்துகிறார்கள்...

வாழ்த்துரை

சுமார் பதினெட்டு ஆண்டுகளாக எங்கள் பள்ளிவாசலில் ஹாபிஸாவாக பணியாற்றி, தற்போது தலைமை இமாமாக இருந்து நல்ல பல சேவைகள் செய்து வரும், குறிப்பாக கல்வி விழிப்புணர்வில் அதிக ஆர்வத்துடன் செயல்படும் எங்கள் அன்பிற்குரிய மவ்லவீ, ஹாஃபிஸ், ஹாஜீ. மு. முஹம்மது பஸீம் தாவூதீ அவர்கள் தொகுத்துள்ள இந்நூலைப் பார்வையிட்டேன்.

நம் நாட்டின் விடுதலைக்காக நம் முன்னோர் செய்த தியாகங்கள், பட்ட கஷ்டங்கள் எல்லாமே மறக்கடிக்கப்பட்ட-மாற்றப்பட்ட நிலையில்..., இளைய தலைமுறையினருக்கு ஓரளவாவது உண்மை நிலையை இந்நூல் நினைவுபடுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியத் திரு நாட்டின் மண்ணின் மைந்தர்களாகிய நாம் இன்று அன்னியர்களாகச் சித்தரிக்கப்படுகிறோம். இந்த மோசமான சூழ்நிலையில் இது போன்ற நூல்கள் வெளிவருவது மிகமிக அவசியமான ஒன்றாகும்.

எங்கள் ஹாபிஸா அவர்களின் சேவையை அல்லாஹ் கபூல் செய்து, இந்நூலைச் சமுதாயத்திற்குப் பயன்மிக்கதாய் ஆக்கி அருள்வானாக, இன்னும் பல நூற்கள் அவர் எழுதிட வாழ்த்தி துஆ செய்கிறேன். பொதுமக்களும் நல்ஆதரவு தந்து, ஒத்துழைப்பு நல்கிட வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்

அல்ஹாஜ் M. முஹம்மது அன்சாரி ஸாஹிப்
பரம்பரை முத்தவல்லி,
அல்-முஹம்மதிய்யா பள்ளிவாசல், திருச்சி - 8.

0099-4hL

பணிவன்புடன்...

இது "இந்திய சுதந்திரப் போரும் இஸ்லாமியர்களும்" என்ற தலைப்பில் AUG-2002-ம் ஆண்டின் சுதந்திர தின வாரங்களில் ஜுமுஆ சொற்பொழிவுக்காக, ஈரோடு மண்டல ஜமாஅத்துல் உலமாவின் வேண்டுகோளுக்கு இணங்க தொகுத்த தொகுப்பாகும். அதன் பின்னர் **"மணிச்சுடர்"** நாளிதழில் தொடர்ந்து பிரசுமானதைப் படித்த பலரும் குறிப்பாக ஆலிம் தோழர்கள் இத்தொகுப்பிலுள்ள செய்திகள் சுருக்கமாகவும், மிக இலகுவாகவும் இருப்பதால் நூல் வடிவம் பெற்றால் சமுதாயத்திற்கு அதிக பலன் தரும் என ஆர்வப்படுத்தினர். அதன் வெளிப்பாடே **"இந்தியாவும் இஸ்லாமியத் தியாகிகளும்"** நூல் வடிவில் உங்கள் பொற்கரங்களில்! இதன் பெருமையும் பாராட்டும் மூல நூலாசிரியர்களையே சாரும்.

இந்நூல்...,

☑ இதில் வரக்கூடிய வீர தியாகிகளின் குறிப்புகளே தவிர வரலாறு அல்ல. ஒவ்வொரு தியாகியின் வரலாறும் தனிப்பெரும் நூல் எழுதும் அளவுடையது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் நம்முன்னோரின் மறைக்கப்பட்ட தியாக வரலாறுகள், இஸ்லாமியர்களை அன்னியர்களாகச் சித்தரித்தல், நம் தேசப்பற்று மீது அவ்வப்போது சுமத்தப்படும் அவலங்கள், களங்கங்கள், தேசவிடுதலைக்கும் இஸ்லாமியர்களுக்கும் தொடர்பில்லை, என்பனபோன்ற பொய்ப் பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இளைய சமுதாயத்திற்குத் தெளிவுபடுத்தவுமே முக்கியமானவர்களின் முக்கிய செய்திகள் மட்டுமே இதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

☑ உலமாப் பெருமக்கள் ஓரிரு வாரங்களில் ஜுமுஆ சொற்பொழிவுகளில் பேசும் வகையில்,

☑ ஒரு பயணி தனது ஊரை சென்றடைவதற்குள்,

☑ ஒரு இல்லத்தரசி ஒரு வேளை உணவை சமைத்து முடிப்பதற்குள், படித்து முடிக்கும் வகையில் அமையப்பெற்ற சிறு தொகுப்பாகும்.

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினம், குடியரசு தினங்களில் ஜும்ஆ சொற்பொழிவுகளிலும், பொதுக்கூட்டங்களிலும் ஊர்கள் தோறும், மஹல்லாதோறும் இவைகளை எடுத்துக்கூறுவதும் மிக மிக முக்கியமாகும்.

இந்நூல் வெளிவர எல்லா வகையிலும் உறுதுணையாய் இருந்த அத்தனை உள்ளங்களையும் நினைவு கூர்ந்து நன்றியை சமர்ப்பிக்கிறேன். குறிப்பாக ....,

☞ ஆசியுரை வழங்கி துஆச் செய்யும் **எனது பெற்றோர்.**

☞ வாழ்த்துரை வழங்கிய எங்கள் **முத்தவல்லி ஹாஜியார்.**

☞ பெரும்பாலான செய்திகளை தொகுக்க உதவிய வரலாற்று ஆய்வாளர் **செ. திவானின்** விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள், மற்றும் உறுதுணை புரிந்த **இதர நூற்கள்.**

☞ முகப்போவியம் வடிவமைத்த மதுரை **ஹாஜி** M.G. **ரஃபீக்.**

☞ நூலை வடிவமைத்து அச்சிட்ட என் இனிய தோழன் S.S. **அப்துல் கனி ஜமால்** ஆகியோருக்கு சிறப்பு நன்றிகள்.

வல்ல நாயன் அல்லாஹ் இந்நூல் மூலம் நிறைந்த பயனளிப்பானாக!

அன்புடன்

மு. முஹம்மது பஷீம் தாவூதி

நம்புதாளை.

திருச்சிராப்பள்ளி-8,

15.08.2004


அணிவகுப்பு

இந்தியா நம்முடையது

ஸாரே ஜஹான் சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா
ஹம் புல்புலே ஹை இஸ் கி யே குல்சிதான் ஹமாரா
குர்பத்மே ஹோ அகர் ஹம் ரெஹ்தா ஹை தில் வதன் மே
ஸம்ஜோ வஹி ஹமேபீ தில் ஹோ ஜஹான் ஹமாரா
பர்பத் ஜோ சப்சே ஊன்சா ஹம் சாயா ஆஸ்மான் கா
வோ சன்தரி ஹமாரா வோ பாஸ்பான் ஹமாரா
கோதி மே கேல்த்தி ஹை ஜிஸ்கி ஹஸாரோ நதியான்
குல்ஷன் ஹை ஜின்கே தம் சே ரஹ்கே ஜஹான் ஹமாரா
மத்ஹப் நஹி சிகாதா ஆபஸ் மே பைர் ரக்னா
ஹிந்தி ஹை ஹம் வதன் ஹை ஹிந்துஸ்தான் ஹமாரா
யுனான் வ மிஸ்ர், ரூமா ஸப் மிட் கயே ஜஹான்சே
பா(க்)கி மகர் ஹை அப்தக் நாமோ நிஷான் ஹமாரா
இக்பால் கோயி மொஹர்ரிம் அப்னா நஹி ஜஹான்மே
மாலும் க்யா கிஸி கோ தர்தே நிஹான் ஹமாரா.

- மஹாகவி அல்லாமா முஹம்மது இக்பால் (ரஹ்)

(சுதந்திர இந்தியாவில் முதன் முதலில் பாடப்பட்ட தேசிய கீதம் இதுவேயாகும்)



சமர்ப்பணம்

**இந்தியத் திருநாட்டின்
விடுதலைக்காகத் தங்களையே
அர்பணித்துக் கொண்ட ஏழு
லட்சத்திற்கும் மேற்பட்ட
உலமாப்பெருமக்கள்,
முஸ்லிம்கள் அனைவருக்கும்.....**

இந்தியா

அடிமைப்படுத்தப்பட்டது

கி.பி. 1579ல் தாமஸ் ஸ்டீபன்ஸ் என்ற ஆங்கிலேய கிருஸ்துவப் பாதிரி தமிழகம் வந்தார். செழித்தோங்கிய இந்திய பூமியையும், இங்குள்ள வியாபாரத்தையும் கண்ட அவர் இங்கிலாந்துக்குக் கடிதம் எழுதினார். அவரின் பல கடிதங் களுக்குப் பிறகு 1599 செப்டம்பர் 24ல் லண்டனின் “பவுண்டர்ஹால்” என்ற இடத்தில் ஆங்கிலேயர் ஆலோசனை செய்து வியாபார நோக்கத்தோடு இந்தியா வந்தனர். இங்கு சிற்றரசர்களின் ஒற்றுமையில்லா ஆட்சியையும் போட்டி பொறாமைகளையும் கண்டு இவர்களிடம் யுத்தம் செய்தால் எளிதில் வெற்றிபெற்று விடலாம் என்பதை உணர்ந்து கொண்டு பிரஞ்சுப் படைகளிடம் தோல்விகண்ட சிற்றரசர்களுக்கு உதவி செய்து பிரெஞ்சுப் படையைத் தோல்வியுறச் செய்தனர். மற்றும் பல சிற்றரசர்களிடம் போர் செய்து தம் பலத்தையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டு அதிகாரத்தை நிலைநாட்டினர். மக்களை அடிமைப்படுத்த ஆரம்பித்தனர். இறுதியில் சென்னை, டெல்லி, ஹைதராபாத் போன்ற முக்கிய நகரங்களைக் கைப்பற்றினர். அங்கெல்லாம் பிரிட்டிஷ் இராணுவம் ஆட்சியை ஆரம்பித்தது. 1773-ல் முழு இந்தியாவும் அடிமைப் படுத்தப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் நான்கு பிரிட்டிஷ்காரர்கள் சேர்ந்து 80,000 பவுண்ட் முதலீடு போட்டு ஒரு வியாபார நிறுவனத்தை கல்கத்தாவில் தொடங்கினர்.

வணிகம் செய்யும் நோக்கத்தோடு இந்தியாவுக்குள்ளே நுழைந்த வெள்ளையனுக்கு இந்த மண் மீது ஆசை பிறந்து, இங்குள்ள வளங்களை நிரந்தரமாகக் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு சில சதி வேலைகளைச் செய்து இங்கு ஒரு சாம்ராஜ்யத்தையே நிறுவிக் கொண்டனர் என்பது தான் அண்மைக் காலம் வரை கூறப்பட்ட வரலாறு.

ஆனால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. அக்பர் தனது "வாளின் நிழலில்" எனும் நூலில் இந்திய மண்ணிலிருந்து இஸ்லாமிய அரசை அழிக்கவே வெள்ளையன் இந்தியாவுக்குள் வந்தான். வியாபார நிறுவனம் தொடங்கிய தெல்லாம் தங்களின் தீய நோக்கத்தை மறைத்துக் கொள்ளவே எனக் கூறுகிறார்.

கிழக்கிந்திய கம்பெனியை வெள்ளையர்கள் இங்கே தொடங்கிய காலகட்டங்களில் இப்போதுள்ள பூகோள அமைப்பில் இந்தியா இருக்கவில்லை. ஆப்கானிஸ்தான், நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ் இவை அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது.

இந்து ராஜாக்கள் பலர் பல பகுதிகளில் ஆட்சி நடத்தி வந்தனர். வியாபார நோக்கத்தில் வந்தோம் எனக் கூறிக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனியினர் இங்குள்ள முஸ்லிம்களுக்கு எதிராகப் பல இனத்தவர்களையும் தூண்டி விட்டனர். அப்பொழுது கல்கத்தா பகுதிகளில் முஸ்லிம்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தனர்.

இந்த முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கெதிராக வீரத்திற்குப் பெயர் போன ராஜ புத்திரர்கள், சீக்கியர்கள், இந்து மன்னர்கள் என அனைவரையும் சண்டையிட வைத்தனர் ஆங்கிலேயர்கள். மேலும் இரு அரசர்கள் தங்களுக்கிடையே மோதிக் கொள்ளும் போது இருவரில் ஒருவரிடம் ஒப்பந்தம் பேசுவார்கள் வெள்ளையர்கள்.

இந்தப் போரில் உனக்கு ஆதரவாக நாங்கள் எங்கள் படைகளைத் தருகிறோம். அதற்குக் கூலியாக போரில் நீ ஜெயித்து விட்டால் எதிரி அரசனிடமிருந்து நீ அபகரித்துக் கொள்ளும் நிலப்பரப்பில் பாதியை எங்களுக்குத் தரவேண்டும் என்ற அடிப்படையில் அமையும் அந்த ஒப்பந்தம்.

இப்படித் தந்திரமாகப் பெறப்பட்ட நிலங்களில்தான் ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவிக்கொண்டனர் ஆங்கிலேயர்கள். சுமார் 100 ஆண்டுகள் மட்டுமே வியாபார நிறுவனமாகக் கம்பெனியை நடத்தினர். அது வரை கம்பெனி மூலம் மட்டுமே கொள்ளையடித்துச் சென்ற ஆங்கிலேயர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினர்.

சுமார் 200 ஆண்டு காலம் இங்கிலாந்து நாட்டிற்கு அடிமைப்படுத்தப்பட்டு கிடந்த நமது தாய்நாட்டு விடுதலைக்காக உழைத்தவர்கள் உயிர், உடமைகளைத் துறந்து சொல்லமுடியாத தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும் ஆளாக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் நம் சமுதாய மக்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறோம்.

ஏறத்தாழ 800 ஆண்டுகள் இந்த மண்ணை ஆட்சி செய்து இந்த மண்ணுடன் இரண்டறக்கலந்து மண்ணின் மைந்தர்களாய் வாழ்ந்து காட்டிய சமுதாயம் இஸ்லாமிய சமுதாயம். நாங்கள் ஆண்ட மண்ணை அந்நியன் அபகரிக்கிறான் என்றதும் வீறு கொண்டெழுந்து வலிமையுடன் போராடி நாட்டு விடுதலைக்காகப் போராடுவதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்று வையகத்துக்கே உணர்த்திய வரலாறு முஸ்லிம்களுக்கு உண்டு.

முதல் விடுதலை வீரர் முஸ்லிமே

சூழ்ந்துகொண்டிருந்த அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராக முதன் முதலாக வீரம் செறிந்த போராட்டம், கேரளம் சார்ந்த தமிழ்நாட்டில் தான் தொடங்கியது. அதனை நிகழ்த்திய தளபதியும் ஒரு தமிழ் முஸ்லிமேயாகும். அவரே குஞ்சாலி மரைக்காயர் என வரலாறு கூறுகிறது.

வாஸ்கோடகாமா 1498 மே 17-ல் முஸ்லிம் மாலுமியின் உதவியுடன் பயணம் செய்து கோழிக்கோடுகப்பாட்டு என்ற இடத்தில் வந்து இறங்கியபோதே இங்கே முதல் சுதந்திர வீரரும் தோன்றிவிட்டார். வாஸ்கோடகாமா வந்தது முதல் கோழிக்கோடு சாமுத்ரி அரசனுக்கும், பரங்கியருக்கும், இடைவிடாத போர் நடந்து கொண்டிருந்தது. போர் பற்றி சாமுத்திரியின் அரச சபையில் தரைப்போர் தளபதி மங்காட்டச்சனும் அரசனின் அந்தரங்க நண்பர்கள் தலைப்பண்ணை நம்பூதிரியும், குஞ்சிப் போர்க்குரும் மன்னரிடம் என்ன செய்வதென்று விவாதித்தனர்.

அப்போது நான் இருக்கிறேன் என்று ஒரு குரல் இடியோசையைப் போல் எழுந்தது. குஞ்சாலி மரைக்காயர் வந்து கொண்டிருந்தார். அன்னியரைக் காலூன்ற அனுமதிக்க முடியாது. அதற்காகத் தரையிலும், கடலிலும், மனித இரத்தம் பெருக்கெடுத்து ஓடினாலும், நாம் அதற்குத் தயார் என்று குஞ்சாலி மரைக்காயர் சொன்னார். கடற்படைக்குத் தலைமையேற்றுச் சென்றார்.

1537-இல் 51 சிறந்த கப்பல்களில் எண்ணாயிரம் வீரர்களுடன் குஞ்சாலி மரைக்காயர் அங்கு சென்றார். இலங்கைக்குத் தனது படையில் ஒரு பிரிவினை அனுப்பினார். இறுதியில் எதிரியின் குண்டுகளுக்குப் பலியானார். நாட்டு விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்.

வீரர் ஹைதரும், தீரர் திப்புவும்

அரசாண்ட மன்னர்கள், ஆன்மீகம் உணர்த்திய உலமா பெருமக்கள், அரசியல் தலைவர்கள், சமுதாய சிற்பிகள், சமுதாய இயக்கங்கள், செல்வந்தர்கள், பெண்கள் என அனைத்துத் தரப்பிலிருந்தும் நாட்டு விடுதலைக்காக இஸ்லாமியர்கள் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள். அரசாண்ட மன்னர்களில் வீரர் ஹைதர் அலியும், அவர்தம் மைந்தர் தீரர் திப்புசுல்தானும் முக்கியமானவர்கள்.

கி.பி. 1760-ம் ஆண்டில் மைசூரின் தளபதியான வீரர் ஹைதர் அலி ஆங்கிலேயர்களை இந்திய மண்ணில் இருந்து வெளியேற்றத் தன்னந்தனியாக கடும் போராட்டம் நடத்தினார். இறுதிவரைப் போராடி வெற்றிபெற முடியாமல் அவரின் காலம் முடிந்த போது ஆங்கிலேயர் நிம்மதியடைந்தனர். ஆனால் ஆங்கிலேயர்களின் நிம்மதியை நீடிக்க விடாமல் வேங்கையென எழுந்தார் ஹைதரின் திருமகனார் தீரர் திப்புசுல்தான். ஆங்கிலேயர்களைத் தான் பிறந்த மண்ணிலிருந்து விரட்டும் வரை பஞ்சுமெத்தையில் படுப்பதில்லை என்றும், “ஆட்டு மந்தையாய் 200 வருடங்கள் வாழ்வதை விட இரு நாட்களேனும் சிங்கமாய் வாழ்வது மேல்” என்றும், ஆங்கிலேயர்களுக்குச் சவால் விட்டு அஞ்சாது களத்தில் நின்றவர் திப்பு. தென்னாட்டுச் சிங்கம் ஹைதர் அலிக்கும் பாத்திமா பீவிக்கும் ஹிஜ்ரீ 1163 வருடம் துல்ஹஜ் பிறை 20 சனிக்கிழமை (கி.பி. 1763) மகனாகப் பிறந்த இவர் ஹிஜ்ரீ 1213ம் வருடம் துல்கஃதா பிறை 28 (கி.பி. 1796) மே 4ல் எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார்.

ஆங்கிலேயர்கள் நாட்டைக் கைப்பற்ற ஆரம்பித்த போது இந்தியாவின் பல பகுதிகளை ஆண்டு வந்த பல மன்னர்கள்

அவர்களிடம் சரணடைந்து கப்பம் கட்ட சம்மதித்தனர் ஆனால் திப்புசுல்தான், அவர்களின் மிரட்டல்களுக்கு அஞ்சாமல் எதிர்த்துப் போராடினார்.

சிறுவயதிலேயே அரியணை ஏறி திறம்பட ஆட்சி செய்து வந்த திப்புசுல்தான் தன் உயிர் நண்பராக ஒரு இந்து மத சகோதரரைத் தான் தேர்ந்தெடுத்தார். கிருஷ்ணராவ் என்பவரைத் தன் கோட்டையின் வாசலுக்குத் தளபதியாக நியமித்தார். ஆனால் அவர் இரவோடு இரவாகக் கோட்டை வாசலைத் திறந்து வெள்ளையர்களை உள்ளே அனுப்பினார். அதனால் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களின் உயிர்பறிக்கப்பட்டது, உடமைகள் சூறையாடப்பட்டது. அப்படையை எதிர்த்து நின்ற திப்புவும் இறுதியாகக் கொல்லப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தில் மிகப்பெரும் பங்காற்றியவர் என்று நாட்டு மக்களால் போற்றப்படும் தீரன் சின்னமலை, திப்பு சுல்த்தானின் தூண்டுதலால் தான் விடுதலை போராட்டத்தில் இறங்கினார். திப்புவின் படைத்தளபதியாகவும் விளங்கினார். சுதேசி உணர்வு கொண்ட திப்பு வெளிநாட்டுப் பொருட்களை வெறுத்து ஒதுக்கினார். இவரின் அரண்மனை வாயிலில் ஆங்கிலேயரின் தலையை கவ்வியவாறு புலி உருவம் ஒன்றை நிறுவியிருந்தது அவரின் சுதந்திர உணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

1806ம் ஆண்டில் நடைபெற்ற வேலூர் புரட்சியில் திப்புவின் பிள்ளைகளுக்கும் பெரும் பங்குண்டு என்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளையர்களை இம் மண்ணிலிருந்து விரட்ட முதன் முதலில் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு சபதமெடுத்தவர்கள் ஹைதர் அலியும் அவரது மகன் திப்புவும் ஆவார்கள் என்கிறார் அறிஞர் மார்க்ஸ்.

முகலாய மன்னர் பகதூர் ஷா

முகலாயர்களின் கடைசி மன்னராகிய பகதூர் ஷா ஜாஃபர் தேசபக்தியும் தியாக உணர்வும் கொண்டவர். இவ்வீரரை 49 பிரிட்டிஷ் மக்களைக் கொலை செய்ய உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டி 1858 மார்ச் மாதம் பர்மாவிற்கு நாடு கடத்தி, ரங்கூனில் உள்ள சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தனர். ஒரு நாள் அவர் பசி தாங்க முடியாமல் ஏதாவது உணவு தாருங்கள் என்று கேட்டபொழுது மூடப்பட்ட இரு பாத்திரங்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டன. அதை ஆவலோடு திறந்தபோது அவருடைய இரண்டு மகன்களின் வெட்டப்பட்ட தலைகள் அதில் வைக்கப்பட்டிருந்தது. அவர் மனம் அந்த நேரத்தில் என்ன பாடு பட்டிருக்கும்? கடைசியில் அதே சிறையில் அவர் 1862 நவம்பர் 7ல் தனது 92 வயதில் உயிர் நீத்தார். 1837ல் டெல்லி அரியணையில் ஏறிய இவர் பறங்கியர்களை விரட்டுவதற்குச் சுதேசி மன்னர்கள் யாரேனும் முன்வருவார்களாயின் என் ராஜ்ஜியத்தின் முழு அதிகாரத்தையும் அந்த மன்னர்களிடம் கொடுக்கத் தயாராக உள்ளேன் என வேண்டுகோள் விடுத்தார். விடுதலைக்காக உயிர் விட்ட மன்னர் பகதூர்ஷாவின் மண்ணறையை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் (தேசிய விடுதலைப்படையை உருவாக்கிய பின்) அங்கு சென்று தரிசித்து விட்டு இந்தியாவின் விடுதலை வீரர் இங்கு புதையுண்டு கிடக்கிறார். இந்தப் புனித மண்ணை எடுத்து கொண்டு டெல்லி சென்று அங்கே ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலேயர்களை விரட்டியடிப்போம் வாருங்கள். - **டெல்லி சலோ** - என்று முழங்கினார்.

இவரது அடக்கஸ்தலம் பர்மாவில் உள்ளது. அதில் என்னை அடக்கம் செய்ய இந்தியாவில் 6 அடி மண் கிடைக்கவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி இவரது மண்ணறைக்குச் சென்றிருந்த போது அந்த வாசகத்தை படித்து வேதனை அடைந்தார். பிறகு அங்குள்ள குறிப்பேட்டில் உங்களை அடக்கம் செய்ய 6 அடி மண் ஒரு காலத்தில் இந்தியாவில் கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது இந்தியாவில் உள்ள 85 கோடி மக்களின் இதயங்களில் உங்களுக்கு இடம் உண்டு. ஒவ்வொரு இந்தியரின் இதயமும் உங்கள் இடம்தான் எனக் குறிப்பெழுதிவிட்டு வந்தார். ○

நம்நாட்டு மாப்பிள்ளைமார்கள்

மேற்குக் கடற்கரையில் மலபார், திருவிதாங்கூர், கொச்சி, தென்கன்னடம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தவர்கள் மாப்பிள்ளை மார்கள். வியாபாரத்திற்காக வந்த அரபு முஸ்லிம்களான இவர்கள் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து கொண்டதால் இப்பெயரில் அழைக்கப்பட்டனர். அரபு தேசத்திலிருந்து வந்தாலும் நாட்டு விடுதலைக்காக இவர்கள் அனுபவித்த கஷ்டங்கள், கொடுமைகள் ஏராளம். திருரங்காடி என்னுமிடத்தில் ஜில்லா மாஜிஸ்திரேட் கிலாஃபத் ஊழியர்களில் சிலரைக் கைது செய்ய முயற்சித்தார். ஆங்கிலேய அதிகாரிகளின் இந்த அடக்குமுறைகளை இவர்கள் எதிர்த்துப் புரட்சி செய்தனர். இதனால் பொக்காத்தூரில் 600 மாப்பிள்ளைமார்கள் இராணுவத்தினராலும் போலீஸாராலும் கொல்லப்பட்டார்கள். அதே போல் பட்டாம்பியில் 500 பேர் கொல்லப்பட்டனர். இதோடு மட்டுமின்றி திரூரிலிருந்து

கோயம்புத்தூருக்கு நூற்றுக் கணக்கான காற்றோட்டமில்லாத கூட்ஸ் வண்டியில் புளி மூட்டைகளைப் போல திணித்து ஏற்றி அடைக்கப்பட்டு வண்டி எண் 77 உடன் சரக்கு வண்டி எண் 1711 இணைக்கப்பட்டு கூட்டி வந்தனர். வெப்பமும் தாகமும் தாங்கமுடியாமல் கத்திக் கதறினர். அந்த வண்டியின் பக்கத்து பெட்டியில் பயணம் செய்து வந்த ஷார்ஜண்ட் எ.எச். ஆண்ட்ரூஸ் என்பவர் எதனையுமே கண்டு கொள்ளாமல் பயணம் செய்தார். கூட்ஸ்வண்டி வரும் வழியில் ஷோரனூரில் 30 நிமிடமும் ஒலவக்கோடில் 15 நிமிடமும் நின்றபோது வண்டியில் இருந்து அவர்கள் எழுப்பிய அபயக்குரல் அந்த ரயில்வே பிளாட்பாரம் முழுவதும் எதிரொலித்தது. அதைக் கேட்ட போலீஸார்களோ அக்கதறலை அலட்சியம் செய்தனர். 111 மைல் தூரப் பயணத்திற்குப் பின் போத்தனூரில் வண்டி நின்றதும் கதவு திறக்கப்பட்ட போது 55 பேர் உயிரிழந்து வீழ்ந்தார்கள். அவர்களின் உடல்கள் திரூருக்கு அனுப்பப்பட்டது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மற்றவர்களை மீண்டும் வண்டியில் அடைத்து கோயம்புத்தூருக்கு அனுப்பினர். அங்குவண்டி வந்து சேரும் போது 44 பேர்களின் உயிரும் பிரிந்து விட்டிருந்தது. எஞ்சிய 25 பேரை கோவை சிறைச்சாலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது வழியில் சிலரும் மறுநாள் காலையில் மீதமுள்ளவர்களும் இறந்துவிட்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது.

குறிப்பு: தங்களது வணிகம், நடைமுறை பழக்க வழக்கம் எல்லாவற்றிலும் கண்ணியத்துடன் நடந்து கொண்டதால் கண்ணியம் என்ற பொருள் தரும் "மஹறா" வார்த்தையுடன் மகன் என்ற பொருள் தரும் "பிள்ளை" என்ற வார்த்தையையும் சேர்த்து "மஹறா பிள்ளை" என அழைத்து வந்தனர் அதுவே பின்னால் மாப்பிள்ளை என்றாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

ஜாலியன் வாலாபாக்கின் கோரக்காட்சிகள்

1919 ஏப்ரல் 10ல் டாக்டர் சைஃபுத்தீன் கிச்சலு, டாக்டர் சத்தியபாலு இருவரையும் அமிர்தசரஸ் துணைக் கமிஷனர் ஓமில்லர் இர்வின் தனது வீட்டிற்கு வரச்சொல்லி அவர்களைக் கைது செய்தார். இச்செய்தி காட்டுத் தீயாக பரவ மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டனர். ஆனால் கூட்டங்கள் நடத்த எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. உத்தரவை மீறிக் கூட்டங்கள் நடத்தினால் சுட்டுத்தள்ள உத்தரவிடப்பட்டது. ஏற்கனெவே கூட்டம் நடக்க உள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்ததால் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஜாலியன் வாலாபாக்கில் கூடியிருந்தனர். உத்தரவை மீறிகூட்டம் நடந்ததன் காரணமாக ஆங்கிலேய அதிகாரி ஜெனரல் டயர் தலைமையில் ஆங்கிலேயர்கள் அக்கூட்டத்தில் உள்ளவர்கள் தப்பி வெளியே வர முடியாத அளவிற்கு சுற்றி வளைத்துக் கொண்டு தங்களின் விசைத்துப்பாக்கியில் உள்ள குண்டுகள் தீரும் வரை 1650 தடவை சுட்டுத் தள்ளினார்கள். இதில் 500க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு மைதானத்தின் உள்ளும் வெளியும் சிதறிக் கிடந்தனர். 12 அடி உயரத்திற்கு இறந்தவர்களின் உடல் குவிக்கப்பட்டது. இதில் கொல்லப்பட்டவர்களில் நூற்றுக் கணக்காக முஸ்லிம்களும் அடங்குவர். இந்த கோர நிகழ்ச்சிக்குப் பிறகு தான் நாட்டில் பெரும் மாறுதல்கள் ஏற்படத் துவங்கியது. இதன் காரணமாகத்தான் கிலஃபாபத் இயக்கம் தோன்றியது. இதில் கொல்லப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் என்பது கவனிக்கத்தக்கது.

நேதாஜி படையில் முஸ்லிம்கள்

நேதாஜி ஏற்படுத்திய இந்திய தேசியப் படையில் முஸ்லிம்கள் முக்கியப் பங்கு வகித்தனர். மேஜர் ஜெனரலாக ஷா நவாஸ் கான், கர்னலாக ஹபீபுர் ரஹ்மான், லெப்டினென்ட் கர்னலாக அஜீஸ் அஹ்மது, மற்றும், காதிர், கரீம்கனி, ஓ.எம்.கான், ரஷீது அலி, அஷ்ரபீ மந்தல், அபூ ஹுஸைன், அப்துல் அஜீஸ் ஆகியோரும் இன்னும் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும் இராணுவ வீரர்களாகக் கலந்து கொண்டனர். 1944ல் ஆங்கிலேயர்களுடன் தாக்குதல் நடத்தி பல நகரங்களைக் கைப்பற்றினார்கள் என்றாலும் இந்திய வீரர்களுக்கு உதவிக்கு வந்த ஜப்பான் படைகள் பின் வாங்கியதாலும், இங்லாந்திலிருந்து வந்த ஆங்கிலேய படைகள் அதி நவீன ஆயுதங்களுடன் வந்து இறங்கியதாலும், காயம்பட்ட இந்திய வீரர்களுக்கு மருந்து மற்றும் தேவையான உணவு வசதி இல்லாத காரணத்தினாலும் பல வீரர்கள் மரணித்தார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள். அப்பொழுது நேதாஜி ஜப்பான் சென்றார் 1945 ஆகஸ்ட் 18-ல் பார்மோகா தீவில் "தைகோடு" விமான நிலைய விபத்தில் மறைந்துவிட்டதாக டோக்கியோ வானொலி அறிவித்தது.

ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதிலும் முஸ்லிம்கள் அதிகப் பங்கு வகித்துள்ளனர். அது மட்டுமின்றி உப்பு சத்தியாகிரகத்திற்குத் தலைமையேற்று காங்கிரஸின் தூதுக் குழுவாகவும் பணியாற்றினர். இதனால் இஸ்லாமியர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு பல வருடங்கள் சிறையில் வாழ நேரிட்டது.

நாட்டுக்காக 1931 மார்ச் 23ல் மாவீரன் பகத்சிங்கும் அவனது கூட்டாளிகளும் தூக்கிலிடப்பட்டு உயிர் துறந்தனர். 1932 ஜனவரி 4ல் நாடெங்கும் சட்டமறுப்புப் போர் ஆரம்பமாகியது. அப்போராட்டத்தில், தமிழகத்தில் திருப்பூர் குமரன் கொடி காக்க உயிர் துறந்தார். 1942 ஆகஸ்ட் 8ல் "வெள்ளையனே வெளியேறு" என்ற பம்பாய் காங்கிரஸ் தீர்மானத்தின்படி நாடெங்கும் சுதந்திரக் கிளர்ச்சி கொழுந்து விட்டெரியத் துவங்கியது. இந்தக் கிளர்ச்சியை அடக்க இராணுவத்தினர் பல இடங்களிலும் விமானத்திலிருந்து தாக்கினர். சுமார் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டதாக நேரு அறிவித்தார்.

நம் வீரர்களின் இதயத்தில் நம்பிக்கையும் தேச விசுவாசமும் அணுவளவாவது இருக்கும் வரையில் ஹிந்துஸ்தானின் வாள் மிகக் கூர்மையாக இருப்பதுடன் ஒரு நாள் லண்டன் வாசற்படியையும் தாக்குமென்பது நிச்சயமென முழங்கி பகதூர்ஷாவின் நினைவு நாளில் அவரது கல்லறையில் நேதாஜி வீர சபதமேற்றார்.

மலேயா வாழ் இந்தியர்கள் எழுபத்து ஏழு லட்சம் டாலர்கள் நேதாஜியிடம் வாரிக் கொடுத்தனர். அப்துல் ஹபீப் என்ற முஸ்லிம் செல்வந்தர் ஒரு கோடி மதிப்புள்ள தமது சொத்து முழுவதையும் தந்தார். ரங்கூனைச் சார்ந்த ஹபீபிற்கு ஸேவக்-இ-ஹிந்த் என்ற பதக்கம் நேதாஜியால் வழங்கப்பட்டது. கோடிக்கணக்கான சொத்துக்களையும் பணத்தையும் நேதாஜியின் இந்திய சுதந்திர அரசுக்கு அள்ளித் தந்தனர் உண்மையான தேச நலன் கொண்ட இஸ்லாமியப் பெருமக்கள்.

மார்க்க அறிஞர்கள் எனும் உலமாப்பெருமக்கள்

விடுதலைப்போரில் உலமாப்பெருமக்களின் பங்களிப்பு மகத்தானதாகும். தமது பேச்சு, எழுத்து, வீரம் என அனைத்து வழிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். சுதந்திரப் போராட்டத்திற்காக எந்த வழிபாட்டுத் தலங்களும் பயன்படுத்தப்படாத நிலையிலும் கூட பள்ளிவாசல்களைப் பயன்படுத்தினார்கள். ஜுமுஆ சொற்பொழிவுகளிலும் உலமாப் பெருமக்கள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி வீர உரை நிகழ்த்தினார்கள். ஆங்கிலேயர்கள் மீதும், அவர்கள் அணியும் பேண்ட், மற்றும் டை அணிவது ஹராம் என்றும், ஆங்கிலேய மொழியைக் கற்பது ஹராம் என்றும் ஃபத்வா (மார்க்கத்தீர்ப்பு) கூறினார்கள். அதனாலேயே இன்று கல்வியில் நாம் மிகவும் பின்தங்கிய நிலைக்கு ஆளாகி உள்ளோம் என்று கருத்துக்கள் கூறப்படுகிறது.

1700களின் மத்திய காலத்தில் கல்கத்தாவை ஒட்டிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் நிறுவிய அரசுக்கு எதிராக 1757ல் கல்கத்தாவிலிருந்து ஒரு குரல் ஒலித்தது. அந்த குரலுக்கு சொந்தக்காரர் மவ்லானா சிராஜுத் தௌலா (ரஹ்) அவர்கள்தான். பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிர் முழக்கமிட்ட முதல் சுதந்திர போராட்ட ஆலிம் வீரர் இவரேயாவார். ஆலிம்கள் தான் விடுதலைப் போருக்கு வித்திட்டவர்கள்.

1751 முதல் 1857 வரை முஸ்லிம்கள் தான் குறிப்பாக ஆலிம்கள் தான் விடுதலைப் போரை நடத்தினார்கள். இஸ்லாத்தை அழித்திடும் வஞ்சக நோக்கில் வந்து அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்ட ஆங்கிலேயருக்கு

எதிராகப் போரிட்டு மீண்டும் இஸ்லாமே இங்கே ஆளுகின்ற அறநெறியாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதே ஆலிம்களின் நோக்கம்.

ஆங்கிலேயர் மீது கொண்ட வெறுப்பினால் மட்டும் தான் ஆங்கிலம் படிப்பது ஹராம் என உலமாப்பெருமக்கள் ஃபத்வா வழங்கினர் எனக் கூறுவது ஏற்புடையதல்ல.

ஒரு மொழியைப் பயின்றால் அதன் கலாச்சாரமும் நம்மைத் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. ஆங்கில மொழியின் வழியாக அந்தக் கேடு கெட்ட கலாச்சாரமும் இங்கே நுழையுமானால், அதுகாறும் பேணப்பட்டு வரும் தூய இஸ்லாமிய வழி முறை பட்டுப்போக வழியேற்படும் என்பதால் மக்களைக் கலாச்சார சீர்கேட்டிலிருந்து காக்கவே அந்த ஃபத்வா (மார்க்கத்தீர்ப்பு) வழங்கப்பட்டது. இஸ்லாத்தை ஒழிப்பதே வெள்ளையனின் லட்சியம் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்த பின் அவனுடைய இராணுவத்தில் முஸ்லிம்கள் பணியாற்றுவது தகுமா? எனவே தான் பிரிட்டிஷ் இராணுவத்தில் முஸ்லிம்கள் பணியாற்றக்கூடாது எனவும் தீர்ப்பு வழங்கினர் உலமாப்பெருமக்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆலிம்கள் நடத்திய ஆயுதந்தாங்கி விடுதலைப் போர் எனும் வீர வரலாற்றில் பல ஆலிம்கள் கைது செய்யப்பட்டார்கள்.

மவ்லானா யஹ்யா அலீ, மவ்லானா முஹம்மத் ஜாஃபர், மவ்லானா முஹம்மத் ஷஃபீ லாகூரீ மூவருக்கும் மரண தண்டனையை வழங்கினான் ஆங்கில நீதிபதி. அவன் தன் தீர்ப்பில் இப்படிக் கூறினான்.

“நீங்கள் மூவரும் உயிர் பிரியும் வரை தூக்கிலிடப் படுவீர்கள். உங்கள் சொத்துகள் எல்லாம் பறிமுதல்

செய்யப்படும். உங்கள் உடல்கள் உங்கள் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. நீங்கள் அவமானம் அடையும் வரையில் வளாகத்திற்குள்ளேயே புதைக்கப்படுவீர்கள்."

தூக்கிலிடும் நாளை எதிர்பார்த்து சிறையில் இருந்தனர் இந்த மவ்லவிகள். எந்தக் கவலையும் அவர்களின் முகத்தில் இல்லை. மரணத்தை இறைவழியில் உயிர் துறக்க கிடைத்த மாபெரும் வாய்ப்பு எனக் கருதினார்கள் இந்த ஆலிம்கள்.

விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களின் அடிமைத் தனத்திற்கு எதிரான போரில் வீரமரணம் அடைவது அல்லாஹ்விடம் சொர்க்கத்தைப் பெற்றுத் தருவது என்ற மகிழ்ச்சிதான் அவர்களுக்கு இருந்தது.

இந்நிலையில் மரணத்தைச் சந்திக்க இருக்கும் அவர்களை வேடிக்கை பார்க்க சில ஆங்கில பெண்களும் ஆண்களும் வந்தனர். சிறைக்குள் நாளை தூக்கில் தொங்க இருப்பவர்களின் முகம் இன்று எப்படி இருக்கும் என்று பார்த்து மகிழ வந்த வஞ்சக நெஞ்சம் கொண்டவர்கள் அவர்கள்.

மரணத்திற்குத் தயார் நிலையில் உள்ள ஆலிம்களைக் காண வந்த அவர்கள் சிறையில் முற்றிலும் மாற்றமானதொரு சூழ்நிலையைக் கண்டார்கள். மரண தண்டனை விதிக்கப் பெற்ற அந்த மவ்லவிகளின் மனம் கலங்கவில்லை. மகிழ்ச்சியில் அவர்களின் முகங்கள் காணப்பட்டன.

வேடிக்கை பார்க்க வந்தவர்கள் நொந்து போய்க் கேட்டார்கள். "மரண தண்டனையை எதிர் நோக்கும் நீங்கள் எப்படி மகிழ்ச்சியில் திளைக்கிறீர்கள்?"

அடிமைத்தளைகளுக்கு எதிராகப் போராடி அதில் மரணத்தைச் சந்திப்பவர்களுக்குக் கிடைக்கும் மறுமைப்

பேறுகளைச் சொன்னார்கள் ஆலிம்கள். அவர்கள் வெட்கித் தலைகுனிந்து வாயடைத்துத் திரும்பினார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவது ஜிஹாத் என்று கூறி சுதந்திரத் தீயைப் பரவச் செய்தனர். டாக்டர் ஜேம்ஸ் என்ற வெள்ளையர் அதிகாரி தன் மேலிடத்திற்கு எழுதியக் கடிதத்தில் **இந்திய விடுதலையை பெரும்பாலும் முஸ்லிம்களே பெரிதும் விரும்புகின்றனர். தங்கள் சதவிதத்தில் 50க்கும் அதிகமான நபர்கள் போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர். இவர்களுக்கு விடுதலை தாகத்தை இஸ்லாமிய மார்க்க அறிஞர்களான உலமாபெருமக்கள் ஏற்படுத்துகின்றனர் என்று எழுதினார்.** அதன் விளைவாக இந்திய உலமாபெருமக்களில் பலரை வெள்ளையர்கள் பள்ளிவாசல்களிளேயே தூக்கிலிட்டார்கள். பல உலமாப்பெருமக்களை சிறையில் அடைத்தனர். பல மத்ரஸாக்கள் இடிக்கப்பட்டது. விடுதலைப்போரில் உலமாபெருமக்கள் பங்கு பற்றி இந்து மகாசபையின் ஸ்தாபகர் வீர சாவர்கர் எழுதிய முதல் இந்திய சுதந்திர யுத்தம் என்ற நூல் கூறும் விபரங்கள் இதற்கு ஆதாரமாகும். அதில் கூறப்படுவதாவது ஒரு மவ்லவியும் ஆங்கிலேயரும் நண்பர்களாக இருந்தனர். மவ்லவி ஒரு நாள் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருக்கும்போது ஆங்கிலேய நண்பர் இந்த ஆலிமை சந்திக்க வந்தார். நண்பர் மரணமடையும் முன்பு அவரிடம் தங்களின் கடைசி விருப்பம் என்னவென்று கேட்டபோது "நான் என் மனதில் உள்ள ஒரு ஏக்கத்தை ஒளிக்காமல் கூறுகிறேன். எனக்கொரு வருத்தம் இருக்கிறது, என் ஆயுளில் இரண்டு வெள்ளைக்காரர்களைக் கூட என் கையால் கொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே" என்று மவ்லவி வருத்தத்துடன் குறிப்பிட்டதாக கென்னடி என்ற ஆங்கில் வரலாற்று ஆசிரியர் தெரிவித்துள்ளார். (மு.இ.சு. யுத்தம்- பக்கம்-48).

எந்த முஸ்லிமையும் விட்டுவைக்கவில்லை

1857 கலவரத்திற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் குறிப்பாக முஸ்லிம்கள் மீது தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குக் கடும் தண்டனைகள் விதித்துக் கொடுமைப் படுத்தினார்கள். ஐந்து மாதத்திற்குத் தொடர்ந்து அடித்து நொறுக்கி வரிசையாக நிக்கவைத்து பீரங்கி குண்டுகளால் தாக்கினார்கள். நெற்றியிலும் நெஞ்சிலுமாக சுட்டுக் கொன்றார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்கள்.

நாய், பன்றிகளின் இறைச்சியை வலுக்கட்டாயமாக வாயில் நுழைத்து கொடுமைப் படுத்தினார்கள். வாழ்நாள் கைதியாக நாடுகடத்தினார்கள். நீண்ட ஜுப்பா-தாடியுடன் கூடிய எந்த முஸ்லிமையும் விட்டுவைக்கவில்லை. ○

இரு சிங்க மவ்லானாக்கள்

அரசியலில் தலைமைப் பொறுப்பிலிருந்த மவ்லானா சவுகத் அலி, மவ்லானா முஹம்மது அலி என்ற இரட்டையர் மறக்கமுடியாதவர்கள். என் இருகைகளிலும் உள்ள இரு சிங்கங்கள் என்று காந்திஜியே இந்த அலி சகோதரர்களைப் பற்றிக் கூறுகின்ற அளவிற்கு விடுதலைப் போரில் இவர்களின் பங்கு சிறப்பாக இருந்தது. மவ்லானா முஹம்மது அலி ஒத்துழையாமை இயக்கத்திலும், கிலாஃபத் இயக்கத்திலும் பங்கு கொண்டு பலமுறை சிறைப்பட்டார். 1930ம் ஆண்டு லண்டனில் நடந்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நோயுற்ற நிலையிலும் தூதுவர்கள் தடுத்தும் கேளாமல் உணர்ச்சியுடன் பேசினார். உயிருக்கே ஆபத்து நேரிடலாம் என மருத்துவர்கள் எவ்வளவோ எடுத்துக்கூறி தடுத்தும் கூட என்

உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தாமல் இறப்பதை விட வெளிப்படுத்தி இறந்து விடுகிறேன் எனக்கூறி மாநாட்டில் உணர்ச்சியுடன் பேசினார். “கொடுத்தால் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுங்கள். இல்லையேல், சுதந்திரம் பெற்ற இந்நாட்டில் ஒரு புதை குழி கொடுங்கள்” என்று கர்ஜனை செய்தார். பொங்கிய உணர்ச்சியால் இதயம் வெடித்தது. பின்னர் நாடு திரும்பாமல் சுதந்திரநாடான லண்டனிலேயே இறப்பெய்தினார். உலகிலுள்ள எத்தனையோ நாடுகள் அவரது உடலை அடக்கம் செய்யப் போட்டி போட்டன. ஆனால் அந்தப் பெருமை பல நபிமார்களை அடக்கம் செய்யப்பட்டிருக்கும் பாலஸ்தீனம் (பைத்துல் முகத்தஸ்) நாட்டிற்குத்தான் கிடைத்தது. நாட்டைப் பொருத்தவரை பிரச்சனைகள் ஏற்படும்பொழுது, நான் முதலாவதாகவும் இந்தியன், கடைசியும் இந்தியனே. அதேபோல, மதத்தை பொறுத்தவரை பிரச்சனை ஏற்படும் போது நான் முதலாவதாகவும் முஸ்லிம், இறுதியிலும் முஸ்லிமே! எனத் தெளிவாகக் கூறுவார். அலி சகோதரர்கள் போன்ற உண்மையுள்ள வேறு இரு நல்ல முஸ்லிம்களை நான் கண்டதேயில்லை என காந்தி பெருமையுடன் கூறுவார். நெஞ்சுரம் பெற்றவன் நெப்போலியன். நாவன்மைப் பெற்றவர் எட்மண்ட் பரிக், எழுத்து வன்மைப் பெற்றவர் மைக்காலே, ஆனால் இம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றவர் மவ்லானா முஹம்மதலி ஆவார் என உலகின் தலைசிறந்த எழுத்தாளர் எச்.ஜி. வெல்ஸ் கூறுகிறார்.

அலி சகோதரர்களின் தாயார் பீ அம்மா அவர்கள் தன் இல்லத்தில் தன் கரத்தால் நெய்யப்பட்டத் துணியை மவ்லானா முஹம்மது அலி அவர்கள் காந்தியடிகளுக்குப் போர்த்தி இது தங்களுக்கு கத்ர் (கண்ணியம்) ஆக இருக்கட்டும் என்று கூறினார். அது முதல் பருத்தி ஆடைகளுக்கு கதர் என்ற பெயர் ஏற்பட்டது என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

முதல் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆஸாத்

இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் நாட்டு விடுதலைக்காக ஆற்றிய பங்கு மிகச்சிறப்பானதாகும். கிலாஃபத் இயக்கத்திலும், ஒத்துழையாமை இயக்கத்திலும் பங்கு கொண்டு ஆங்கிலேயரை விரட்ட அரும்பாடுபட்டு சிறையும் சென்றார். இந்தியா சுதந்திரம் அடைந்த பின் நாட்டின் முதலாவது கல்வி அமைச்சராகப் பணியாற்றினார்.

மவ்லானா அபுல் கலாம் ஆஸாத், முகலாயப் பேரரசர் அக்பர் காலத்தில் வாழ்ந்த ஷேக் ஜமாலுத்தீன் தெஹ்லவீ (ரஹ்) பரம்பரையில் வந்த மவ்லானா முஹம்மத் காஹிருத்தீனின் புதல்வராக 1888 செப்டம்பரில் மக்காவில் பிறந்தவர். மௌலானா அபுல்கலாம் ஆஸாத் 1898ல் குடும்பத்தாருடன் இந்தியாவில் கல்கத்தாவில் வசிக்கத் தொடங்கினார். 1905ல் கெய்ரோ அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் பயின்றார். 1907ல் இந்தியா திரும்பினார்.

1923ல் டெல்லியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் தலைவராகப் பணியாற்றினார். 1930ல் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் 1932ல் சட்ட மறுப்பு இயக்கத்திலும் கலந்து சிறை சென்றார். 1940ல் ராம்நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினார். 1942 ஆகஸ்ட் புரட்சி, இப்படி அத்தனை போராட்டங்களிலும் கலந்து போராடினார். அரசு இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. வன்மையாகவும் வல்லமையாகவும் பேசிடும் இவர் பல நூல்களை எழுதியவர், 'வாளினும் வலியது பேனா' என்ற முதுமொழிக்கு ஆஸாத்தின் பேனாவை விடச் சிறந்த சான்று காணமுடியாது. மனித வர்க்கத்தின் சிறந்த லட்சணங்களுக்கு உறைவிடமான இவர் 1958-ல் காலமானார். ○

மஹாகவி அல்லாமா முஹம்மது இக்பால்

இந்தியா ஈன்றெடுத்த தலைசிறந்த கவிஞரான இவர், உணர்ச்சியூட்டும் தன் கவியின் மூலம் மக்கள் மனதில் விடுதலை வேட்கையை ஏற்படுத்தினார். பிரசித்தி பெற்ற இவரின் **"சாரே ஜஹான்சே அச்சா, ஹிந்துஸ்தான் ஹமாரா"** என்ற பாடலே நாடு விடுதலைபெற்ற 1947 ஆகஸ்ட் 15 இரவில் முதன் முதலாக பாடப்பட்ட தேசிய கீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் தேசிய கீதமாக இருப்பதற்குரிய எல்லாத் தகுதியும் பொருத்தமும் இருந்தும், உருது பாஷையில் இருப்பது, முஹம்மது இக்பால் என்ற முஸ்லிம் இயற்றியது ஆகிய இரு காரணங்களுக்காகவே இது பின்னுக்குத் தள்ளப்பட்டு கவிஞர் இரவீந்தரநாத் தாகூரின் **ஜனகனமனஅதி** என்ற கீதம் முன்னிலைப் படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் நமது நாட்டின் இராணுவத்தின் தேசிய கீதமாக இன்றும் அல்லாமா மஹாகவி இக்பால் அவர்களின் கவிதையே முழங்கப்படுவது ஓரளவு மனதுக்கு மகிழ்வைத் தருகிறது. ○

முஃப்தீ இனாயத் அஹ்மத்

இவர் 1857ல் உயர் நீதிபதியாக வெள்ளையர்களால் நியமிக்கப்பட்டார் எனினும் சொந்த நாட்டில் பிறருக்கு அடிமையாகப் பணி செய்வதை வெறுத்து அவர் அப்பதவியை விட்டு விலகி நாட்டு மக்களுக்கு விடுதலை உணர்வு எழும் வண்ணம் தீப்பொறி பறக்கும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். புரட்சியைத் தூண்டியதாக இவர் மீது ஆங்கிலேயர்கள் குற்றம் சாட்டி இலட்சுமணபுரியில் உள்ள சிறையில் அடைத்து பின்பு அந்தமானுக்குக் கடத்தினார்கள். ○

ஹஸ்ரத் மோஹானீ

ஸைய்யிதுல் அஹ்ரார் (சுதந்திர வீரர்களின் தலைவர்) என்று போற்றப்பட்ட மவ்லானா பஃள்லுல் ஹஸன் ஹஸ்ரத் மோஹானீ அவர்கள் நாட்டு சுதந்திரத்திற்காகச் செய்த பணி மகத்தானது. மவ்லானா அவர்கள் 1923ல் கிலாஃபத் கமிட்டித் தலைவராகவும் 1924ல் அகில இந்திய முஸ்லிம் லீக் மாநாட்டுத் தலைவராகவும் இருந்து விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். வீரமூட்டும் சிறந்த உருதுக் கவிதை வடிக்கும் கவிஞராகவும் ஆங்கிலேயரை நடுநடுங்கவைத்திடும் புரட்சிக் கருத்துக்களை எழுதிடும் சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். பலமுறை சிறை சென்றார். சிறையில் அவர் அனுபவித்த இன்னல்கள் கொஞ்சமல்ல, சிறையில் இறைவணக்கத்தைப் பல இன்னல்களுக்கு இடையில் இடைவிடாமல் நிறைவேற்றி வந்தார். அங்கு தரப்பட்ட வேலைகள் அனைத்தையும் பொறுமையுடன் செய்தார். குறிப்பாக இடுப்பு வலிக்க நெடுநேரம் திருகை அரைக்கச் சொன்ன கொடுமையையும் புன்னகையுடன் ஏற்றார். அவர் கைது செய்யப்பட்டபோது கர்ப்பிணியாக இருந்த அவரது மனைவி ஈன்றெடுத்த தன் குழந்தையை அன்பு கணவருக்கு காட்டுவதற்காகச் சிறைசென்று தம் கணவரை சந்திக்கிறார். சிறைக் கம்பிக்கு வெளியே தன் குழந்தையைக் கண்ட ஹஸ்ரத் அவர்கள், ஆசையோடு வாங்கி முத்தம் கொடுக்கிறார். அதையும் குற்றமாகக் கருதிய ஆங்கிலேய அரசு சிறைவிதியை மீறி நடந்தார் என்று பொய் குற்றம் சாட்டி மேலும் 2 ஆண்டுகள் கடும் சிறை தண்டனை வழங்கியது மறக்க முடியாத நிகழ்வாகும். ○

ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் (ரஹ்)

மௌலானா ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் (ரஹ்) அவர்கள் வெள்ளையர் படையை எதிர்க்கப் பெரும் படையை திரட்டும் வேலைகளை செய்தார்கள். ஆங்கிலேயருக்கு எதிராக ஜிஹாத் என்னும் புனிதப் போரைப் பிரகடனப்படுத்தினார். பல்வேறு மத்ரஸாக்களை ஆரம்பித்து இந்தியாவில் இஸ்லாமிய வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். ❍

ஹுஸைன் அஹ்மத் மதனீ (ரஹ்)

இந்திய சுதந்திரப் போரின் போது பட்டுத்துணியில் இரகசியக் கடிதங்களை எழுதி காபூல் வழியாக எல்லைப்புறப் பகுதிகளுக்கு அனுப்பி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான பட்டுத்துணி இயக்கத்தை நடத்திய ஹுசைன் அஹ்மது மதனீ (ரஹ்) அவர்களும், ஷெய்குல் ஹிந்த் மஹ்மூதுல் ஹஸன் (ரஹ்) அவர்களும் பெரும் தியாகம் செய்தனர். ❍

அஹ்மது ஷா என்ற மவ்லவி அஹ்மதுல்லாஹ்

இந்தியாவில் அவதரித்துள்ள இணையற்ற தியாக வீரர்களில், தேசபக்தர்களில், மவ்லவீ அஹ்மதுல்லாஹ்வும் ஒருவர். இவர் சென்னையில் பிறந்து உ.பி.யில் சென்று வசித்து வந்தார். புரட்சி விதையை நாடெங்கும் விதைப்பதற்காக வட இந்தியாவில் பல பகுதியில் பயணம் செய்தார். ஆங்கிலேயரைக் கொன்று குவித்து தேசத்தில் இருந்து அவர்களை நாம் ஒழித்தாலன்றி நம் தாய் நாட்டையோ, நம் மதங்களையோ பாதுகாக்க முடியாது என்று பிரச்சாரம் செய்தார். தடையை மீறி பிரச்சாரம் செய்ததற்காக ஆங்கிலேய அரசு இவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தது. அதற்காக அவர் கைது செய்யப்பட்டு பைசாபாத் நகரில் சிறையில் அடைக்கப்பட்டார்.

1851ல் நடந்த சிப்பாய்க் கிளர்ச்சியின் போது சிப்பாய்ப் போராளிகள் சிறைச்சாலையை உடைத்து இவரை விடுவித்தனர். சிறந்த இராணுவ நிபுணரான இவர் தனக்கென ஒரு சிறு படையைத் திரட்டி லக்னோவின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஒரு சிறு அரசாங்கத்தையே நடத்தினார். ஆலம்பாக்கிலுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தினருக்கு கான்பூரில் இருந்து ஆயுதங்கள் வருவதைக் கண்ட ஹள்ரத் அவர்கள் இதைக் கைப்பற்றுவதற்காக 1858 ஜனவரி 15ல் கான்பூர் நோக்கி படைதிரட்டிச் சென்று தாக்குதல் நடத்தினார். அதன் பின்னர் லக்னோவில் முக்கியபகுதியான "ஷாகத் சுன்கை" என்ற இடத்தைக் கைப்பற்றி கோட்டை போன்ற கட்டிடத்தில் இருந்து ஆங்கிலேயரது பீரங்கிப்படையைத் தாக்கினார். இவரது தாக்குதல்கள் ஆங்கிலேயருக்கு அச்சத்தையும் பல சிக்கல்களையும் ஏற்படுத்தின.

ஆங்கிலேயர் அபகரித்துக் கொண்ட தமது தாலுக்தாரியை மீண்டும் பெற்றே தீருவதென்றும் தமது தேசத்தையும், அவர்களின் ஆதிக்கத்திலிருந்து மீண்டும் விடுவித்தே தீருவது என்றும் சபதம் செய்து அன்னியர்களைத் தமது தேசத்தில் இருந்து விரட்டுவதற்காக வாளை உருவினார்.

அயோத்தியை ஆங்கிலேயேர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதிலிருந்து அஹ்மதுஷா (அஹ்மதுல்லாஹ்) தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தேசத்திற்காகவும் மார்க்கத்திற் காகவும் அர்ப்பணம் செய்வதென உறுதி கொண்டார்.

பின்னர் அவர் மவ்லானாவாகி, புரட்சி பிரச்சாரத்திற்காக ஹிந்துஸ்தான் முழுவதும் யாத்திரை மேற்கொண்டார். இந்த அரசியல் துறவி சென்ற இடமெல்லாம் ஜனங்களிடையே அதற்கு முன்பில்லாத அளவு மகத்தான விழிப்புணர்வு ஏற்படத் துவங்கியது. புரட்சிக் கட்சியின் அரும்பெரும் தலைவர்களையும் அவர் நேரில் கண்டு பேசிவந்தார். அயோத்தி மக்களின் கண்ணாக இருந்தார். தனது தேகம், மனம், சக்தி, எல்லாவற்றையும், உபயோகித்து தேசத்திற்காக சதா உழைத்தும், ஜனங்களுக்குச் சுதந்திர உபதேசம் செய்தும், புரட்சிப் பிரசுரங்கள் ஏராளமாக எழுதியும் விநியோகித்தார். ஒரு கையில் வாளையும் மற்றொருகையில் பேனாவையும், ஏந்தி அவ்வீரத்தியாகி புரிந்த தொண்டிற்கு ஈடே இல்லை.

மவ்லானா அவர்களின் வீரதியாகம்பற்றி இந்து மகாசபை நிறுவனர் வீரசாவர்கர் தனது "எரிமலை" என்ற நூலில் குறிப்பிடும் செய்தியை பாருங்கள்.

பைஜாபாத் சிறையில் தூக்குத் தண்டனை கைதியாக அடைக்கப்பட்டிருந்த மவ்லவீ அஹ்மது ஷாவை சிறைக் கதவுகளை உடைத்துப் புரட்சியாளர்கள் மீட்டுச் சென்றனர். ஆலியா கோட்டையில் ஆங்கிலேயர்களுக்கும், இந்தியச் சிப்பாய்களுக்கும் கடும் போர் நடைபெற்றது.

மவ்லவீ அஹ்மதுஷாவின் அரிய ஆலோசனைப்படி செயல்படாமல் மறைந்திருந்த தங்களின் முன்னே வந்து கொண்டிருந்த ஆங்கிலேயரின் பீரங்கிகளை அவசரப்பட்டு மவ்லவியின் படைவீரர்கள், கைப்பற்றிட தங்களைச் சுற்றியுள்ள ஆபத்தை உணர்ந்து கொண்ட ஆங்கிலேயர் விழித்துக் கொண்டு செயலில் ஈடுபடத் துவங்கினர்.

உக்கிரமான போர் நடைபெற்றது. அங்கிருந்து அயோத்திக்கு வந்த மவ்லவீ அஹ்மதுஷா அயோத்திக் கோட்டையிலிருந்த தொடை நடுங்கி ராஜா ஜகன்னாத் சிங்கிற்கு, தங்களது புரட்சிக்கு ஆதரவு தரக் கேட்டுக் கடிதம் கொடுத்து அனுப்பினார். துரோக சிந்தை கொண்ட அந்த ராஜா, மவ்லவீ அவர்களையே நேரில் பார்க்க வரச்சொன்னார். உடனே ராஜாவின் அழைப்பை ஏற்று மவ்லவீ யானை மீதமர்ந்து சென்றார். நகருக்குள் சென்றதும் நகர வாயிற் கதவுகள் மூடப்பட்டது. அதன் அர்த்தத்தை அறிந்து கொண்ட மவ்லவீ, அஞ்சா நெஞ்சத்துடன் முன்னேறி தான் வந்த யானையின் மாவுத்தனுக்கு யானை கதவை முட்டி உடைக்கட்டும் என்று கட்டளையிட்டு தொடர்ந்து முன்னேற முயன்றார்.

இன்னும் ஒரே தடவை முட்டினால் போதும் கதவு தடாலென்று விழுந்துவிடும், ஆனால் அந்தோ அதற்குள் அந்த துரோக ராஜாவின் தம்பி பாவென் என்பவன், மவ்லவீயைக் குறி

வைத்துச் கூடவே, அப்பெரியவர் உடலில் தோட்டா பாய்ந்து வீர ஸ்வர்க்கமடைந்தார். "இணையற்ற தேசபக்தரும், எண்ணிக்கை யற்ற ஆங்கில வீரர்களை அலற அடித்தவரும், மகாவீரருமான மவ்லவீ அஹ்மதுஷா துரோகியான ஒரு கோழையின் கையால் மரணமடைய வேண்டும் என்பது பாழும் விதியின் கட்டளை போலும்" என்று எரிமலையில் சாவர்க்கர் எழுதுகிறார். 1858 ஜுன் முதல் வாரத்தில் இந்தப்பாவத்தை நிறைவேற்றிய பாதகர்கள், அரசின் அறிவிப்பான 50,000 ரூபாய் வெகுமதியை பெற்றிட மவ்லவீயின் தலையை வெட்டி வெள்ளைத் துணியில் கொண்டு சென்றனர். அதனை கொத்தவாயில் எல்லோரும் பார்க்கும் வண்ணம் கம்பில் சொருகி காட்சிப் பொருளாய் வைத்த கொடுமையினை எழுதிட கையும் மறுக்கிறதே, உள்ளமும் துடிக்கிறதே...!! ○

மவ்லானா அப்துல் ஹமீது பாகவீ

தமிழகத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் அவர்கள் சுதந்திரத்திற்காக தீவிரமாக ஈடுபட்டார்கள். தமிழகத்திற்கு வந்த காந்தியடிகள், ஆசாத் இருவரிடமும், தமிழக மக்களின் தேசிய உணர்வை வெளிப்படுத்தினார்கள். மதுரை டவுன் ஹாலில் ராஜாஜியின் தலைமையில் நடந்த மதுவிலக்குக் கூட்டத்தில் 2 மணி நேரம் அவையிலுள்ள அனைவரும் வீறு கொண்டெழும் வண்ணம் தெளிந்த தமிழில் உரையாற்றினார்கள். கதராடை அணியாத மணமகனின் திருமணத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று அறிக்கை விடுத்தார். உலமாப்பெருமக்கள் மத்தியில் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அல்குர்ஆன் ஷரீபை தமிழ் மொழியில் முதலில் மொழியாக்கம் செய்தது அன்னாரின் சேவைகளில் மிக முக்கியமானதாகும். ○

மணிமொழி மவ்லானா

1905ல் பள்ளப்பட்டி நகரில் பிறந்து திருச்சியில் வாழ்ந்த மவ்லானா, மணிமொழி என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார்கள். இவர் தன் இளைய வயதில் மார்க்கக் கல்வி கற்கும் போது தேசிய இயக்கங்களில் ஈடுபட்டு சுதேசி இயக்கத்தில் தன் மனதைப் பறிகொடுத்தார்கள். தன் ஆசிரியரான சங்கைக்குரிய அமானீ ஹள்ரத் அவர்களின் வெளிநாட்டு உடையொன்றை அது ஆங்கிலேய நாட்டில் தயாரிக்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக அதைத் தீயிலிட்டுக் கொளுத்தினார். இவரது தீவிர தேசப்பற்றால் மத்ரஸாவில் இருந்து நீக்கப்பட்டார். தமிழ்நாடு முழுவதும் 5 ஆண்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலைகளையும், கிலாஃபத் இயக்கத்தின் நெறிமுறைகளையும் மக்களுக்கு பிரச்சாரம் செய்து விடுதலை உணர்வை ஏற்படுத்தினார். இந்திய இராணுவத்தின் தலைவர் நேதாஜியின் நெருங்கிய நண்பராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கினார் கலீலுர் ரஹ்மான் என்ற மணிமொழி மவ்லானா. ○

அல்லாமா அமானீ ஹள்ரத்

1893ம் ஆண்டு ஜுலை 23ல் இராய வேலூரை அடுத்த பள்ளிகொண்டா என்ற ஊரில் மவ்லானா ஹாஜீ அப்துர் ரஹீம் ஹள்ரத் அவர்களது புதல்வராக பிறந்தார்கள். கிலாஃபத் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றினார்கள். 1958ல் ஷைகுல் மில்லத் என்ற பட்டம் காயிதே மில்லத் அவர்களால் ஹள்ரத் அவர்களுக்கு வழங்கப்பட்டது தென்னார்க்காடு மாவட்டம் லால்பேட்டையில் மன்பவுல் அன்வர் என்ற அரபுக் கல்லூரியை நிறுவி சிறப்புடன் நடத்தினார்கள், இன்றும் அக்கல்லூரி நடத்தப்படுகிறது. ○

நம்புதாளை ஆலிம்சா

இராமநாதபுரம் மாவட்டம், நம்புதாளை நகரில் 1885ம் ஆண்டு பிறந்து, பேரறிஞர் நெய்னா முஹம்மத் ஆலிம் சாஹிப் அவர்களிடம் கல்வி பயின்ற ஷைக் அப்துல் காதிர் ஆலிம் அவர்கள் கிலாஃபத் இயக்கப் போரில் தீவிரமாகத் தொண்டாற்றினார்கள். இறையச்சமும், பேணுதலும் கொண்ட இவர் மக்களிடம் சுதந்திர உணர்வை தன் சொற்பொழிவின் மூலம் ஏற்படுத்தி 1955ல் காலமானார். பலர் அறியப்படாத கிராமத்தில் இருந்து கூட விடுதலைக்காகப் போராடிய பெருமை இஸ்லாமியர்களுக்கு உண்டு.

மதுரை மவ்லானா

ஹாஜீ முஹம்மது அசனுத்தீன்-மாஜான் பீவி புதல்வராக 1886ல் மதுரையில் பிறந்தவர். உருதுவிலும் பாரசீகத்திலும் தேர்ச்சி பெற்ற மதுரை ஜனாப் ஹாஜீ முஹம்மது மவ்லானா சாஹிப் மெட்ரிகுலேசன் வரை படித்தவர். தமிழிலும், சௌராஷ்டிரா பாஷையிலும் நன்கு பேசுபவர். மார்க்கப் பற்றுமிக்கவர்.

1917-இல் ஹோம்ரூல் இயக்க காலம் முதல் சுதந்திரம் பெறும் காலம் வரையிலும் தொண்டாற்றி வந்த மவ்லானா சாஹிப், 1921-ல் நிலக்கோட்டை தாலுகா கள்ளுக்கடை வழக்கில் மட்டப்பறை ஐயர் பட்டாபிராமையா ஆகியோருடன் கைது செய்யப்பட்டார்.

20-9-1921 மதுரை மவ்லானா சாஹிபும், திண்டுக்கல் பிரதிநிகளும் காந்திஜியை திண்டுக்கல் வரும்படி அழைத்தனர். திண்டுக்கல் நிகழ்ச்சியை முடித்து மதுரைக்கு காந்தி வரும் போது அப்போதுதான் முதன் முதலாக காமராசர் காந்தியைப் பார்க்கிறார். நிலக்கோட்டை தாலுகாவில் கள்ளுக்கடை ஏலம் போடப்பட்ட போது மதுரை மவ்லானா சாஹிப் மற்றும் 6 பேர் மறியல் செய்தனர். ஆனால் அரசோ, கள்ளுக்கடை மறியல் வழக்கு போடாமல், கொள்ளை வழக்குகளை அவர்கள் மீது தொடர்ந்தது. கள்ளுக்கடை மறியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வது வழக்கமாக இருந்தது. இந்த நிலையில் நாங்கள் என்ன செய்வது என்று மதுரை மவ்லானா சாஹிப் காந்திஜியிடம் ஆலோசனை பெற்றார். இந்த சுற்றுப் பயணத்தில் தான் காந்தியடிகள் தனது மேலாடைகளைத் தூக்கி எறிந்து அரை நிர்வாணத் தோற்றத்தை மேற்கொண்டார். மவ்லானா ஆஸாத் சுபானியும், அப்போது தனது ஆடையை இஸ்லாமிய மார்க்கம் அனுமதிக்கின்ற அளவுக்கு குறைத்துக் கொண்டார்.

பேதமை காட்டி மக்களிடம் பிரிவினை உண்டாக்கும் பிரிட்டிஷ் சட்ட ஆட்சியாளர்களை பொதுக்கூட்டங்களில் வன்மையாக மதுரை மவ்லானா கண்டித்தார்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பணியாற்றிய மவ்லானா சுதந்திரப் பிரச்சாரத்திற்காக எங்கு அழைத்தாலும் தட்டாமல் போய் தொண்டாற்றுவார். விருதுநகரில் அவ்வப்போது நடைபெறும் கூட்டங்களில் மதுரை மவ்லானா சாஹிபின் பேச்சைக் கேட்டும், ஊர்வலத்தில் பங்கேற்றும், அன்றைய இளைஞர் "பெருந்தலைவர் காமராசர்" தமது கடையில் திட்டம் சரி பார்த்து கணக்குக் காட்டாமல், போட்டது போட்டபடி விடுதலை போராட்டத்திற்கு வந்து விடுமளவு ஈடுபாடு கொண்டிருந்தார். ○

திருச்சி முர்தஸா ஹள்ரத்

திருச்சி மாநகரில் பிறந்த ஹள்ரத் அவர்கள் அலிகர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற போது “தஹ்தீபுல் அக்லாக்” என்ற பத்திரிகையில் வந்த தேசப்பற்றுமிக்க கட்டுரைகளைப் படித்துச் சுதந்திர போரில் ஈடுபட தமது படிப்பைப் பாதியிலேயே உதறிவிட்டு நாட்டுப்பணியில் ஈடுபட்டார்கள். கிலாஃபத் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றினார்கள்.

தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களின் பிரதிநிதியாக டில்லி சட்டசபைக்கு முஸ்லிம்களுக்குரிய தென் சென்னையிலிருந்து சுயராஜ்ய கட்சியின் சார்பில் காங்கிரஸ் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மலபார் சுதந்திர எழுச்சியால் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் தூக்கிலிடப்பட்ட சுதந்திர தியாகிகளின் உடல்களை எடுத்துச்செல்ல யாரும் முன் வராதபோது ஹள்ரத் அவர்கள் தனது தலைமையில் ஒரு படையினரை அழைத்துச் சென்று அந்த உடல்களைப் பெற்று திருச்சி காஜாமலை பகுதிகளில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இன்றும் காஜாமலை பகுதியில் உள்ள கபர்ஸ்தான் (அடக்கஸ்தலம்) அந்த வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

மவ்லானா அலி சகோதரர்களின் தாயார் பீ அம்மா அவர்கள் தமிழகம் வந்தபோது அவர்களுடன் சுற்றுப்பயணம் செய்து அம்மையார் அவர்களின் பேச்சை மொழிபெயர்த்து மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வை ஏற்படுத்தினார்கள்.

பல ஆண்டுகள் மத்திய சட்டசபையில் உறுப்பினராக பணியாற்றி நாட்டு விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அன்னார் 1949 நவம்பர் 6ல் தனது 86வது வயதில் காலமானார்கள்.

தமிழக முஸ்லிம்கள்

தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களில் அதிகமானோர் தமிழர்கள். அதிலும் குறிப்பாக நம் சமுதாய மக்கள் என்பதை நினைக்கும் போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம்.

ஆங்கிலேயர்கள் அடித்து உதைத்த போதும் உயிர்பிரியும் வரை தேசியக் கொடியை கீழே விழாமல் பிடித்திருந்ததால் கொடிகாத்த குமரன் என்று திருப்பூர்க் குமரன் போற்றப்படுகிறார், கொண்டாடப்படுகிறார். ஆனால் திருப்பூர் குமரனுக்கும் முன்னால் அக்கூட்டத்தில் அடிப்பட்டு இறந்தவர் இஸ்லாமியத் திருமகன் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரைப்பற்றி கூறப்படுவதுகூட இல்லை, பிறகு எவ்வாறு போற்றப்படுவார்? ○

ஃபக்(க்)கீர் முஹம்மது ஹாஜியார்

ஆங்கிலேயருக்கு எதிராக கப்பல் கம்பெனியைத் துவக்கி கப்பலோட்டிய தமிழன் எனப்பெயர் பெற்றவர் வ.உ. சிதம்பரனார். இவரது வரலாறு பள்ளி பாடநூல்களிலும், சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களை விவரிக்கின்ற தமிழ் நூற்களிலும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இவருக்குத் உறுதுணை நின்ற இஸ்லாமியப் பெருமகனார் ஹாஜி ஃப(க்)கீர் முஹம்மதுவைப் பற்றி ஒருவரி கூட கூறப்படுவதும் இல்லை; எழுதப்படுவதும் இல்லை. 5.10 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்பட்ட சுதேசிக் கம்பெனியில் ரூபாய் 2 இலட்சம் பெறுமான பங்குகளை வாங்கி வ.உ.சி. கப்பல் ஓட்டிய தமிழனாக மாற முழு முதற் காரணமாக விளங்கியவர் ஹாஜியார் அவர்கள் தான். கப்பல் கம்பெனிக்கு ஆங்கிலேயரின் அடக்கு முறைக்கு அஞ்சாமல் துணிவுடன்

முதன் முதலில் பொருள் தந்து உதவியவர் பிரபல முஸ்லிம் வியாபாரி ஃபக்கீர் முஹம்மது ராவுத்தர் ஆவார் என வ.உ.சியே குறிப்பிட்டார். எனவே சுதேசி கப்பல் விடும் முயற்சிக்குப் பக்கபலமாக இருந்து உதவியவர் ஹாஜியார் அவர்களே என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும், யாகூப் சேட், உமர் ஹத்தா ராவுத்தர், நூர்முஹம்மது யூசுஃப், முஹம்மது பாவாசா மரைக்காயர், வீ. சையது ராவுத்தர், கா. அஹ்மது சாஹிப், இ. முஹம்மது சுலைமான், ஐ. இப்ராஹீம் ராவுத்தர், காதர் பாஷா போன்ற சகோதரர்கள் சுதேசிய கம்பெனி கடும் நஷ்டத்தில் இருந்தபோது, வ.உ.சி. விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க நிதியை வாரி வழங்கினார்கள். இவையெல்லாம் ஆதாரப் பூர்வமான வரலாற்றுச் செய்தி களாகும். தூத்துக்குடியில் இருந்து 04.10.1906ல் வெளி வந்த **இந்தியா** எனும் இதழில் வ.உ.சி. வேண்டுகோள் விடுத்தார். மேற்கண்ட இஸ்லாமிய சகோதரர்கள் நிதி அளித்த செய்தி 13.02.1909ல் இந்தியா இதழில் வெளிப்பட்டது.

21.08.1909ல் இலட்சம் ரூபாய் திரட்ட வேண்டும் என வ.உ.சி. வேண்டுகோள் விடுத்தபோது பறங்கியர் நிர்வாகத்திற்குப் பயந்து யாருமே நிதி வழங்க முன்வரவில்லை. ஆனால் நாட்டுப் பற்று மிக்க இஸ்லாமியர்கள் வ.உ.சிக்கு நிதி வழங்கினார்கள். அத்தோடு நின்றுவிடாமல் தூத்துக்குடியில் சுதந்திரவேட்கை யூட்டும் கூட்டங்களை பள்ளி வாசலிலும், சந்தைப்பேட்டையிலும் நடத்திடப் பெரிதும் உதவி புரிந்தனர். இதனால் அரசாங்கத்தின் மூலம் இன்னல்களும், கஷ்டங்களும் முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதை நாட்டுக்காக, நாட்டு மக்களின் நலனுக்காக இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

கண்ணியமிக்க காயிதே மில்லத்

திருநெல்வேலியில் பிறந்த இவர் விடுதலைப் போராட்டத் தலைவர்கள் சைமன் கமிஷனை எதிர்த்துப் போராடத் துவங்கிய போது சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் பி.ஏ. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் தங்கள் கல்லூரி களையும் படிப்பையும் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து துறந்திட வேண்டும் என காந்தியடிகள் வேண்டிக் கொண்டபோது, தனது படிப்பை உதறித்தள்ளிவிட்டு தீவிரமாக விடுதலைப் போரில் ஈடுபட்டார். சென்னையில் கூடிய சென்னை மாகான அரசியல் மாநாட்டில் கடும் எதிர்ப்புகளுக்கு இடையில் ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றப் பெரும்பங்கு கொண்டார். இந்திய விடுதலையையே தனது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மேதையாக விளங்கியவர் முஹம்மத் இஸ்மாயீல் எனும் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் (ரஹ்).

திருநெல்வேலி பேட்டை பள்ளிவாயிலின் முன்பு காயிதே மில்லத்தும் அவருடைய நண்பர்களும், வெளிநாட்டுப் பொருட்கள் புறக்கணிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு வெளிநாட்டுத் துணிகளை எரித்தனர்.

இந்தியாவின் முதல் சுதந்திர தின விழாவில் முஸ்லிம்களை ஆர்வத்தோடு பங்கேற்க வேண்டுகோள் விடுத்ததுடன், தானும் தேசியக்கொடியை சட்டையில் அணிந்து விழாவில் கலந்து கொண்டவர் காயிதேமில்லத். இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தலைவராக இருந்து கட்சிக்குப் பெருமை சேர்த்தார். அரசியலில் பலருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

மாவீரன் மருதநாயகம்

நம் தமிழ் மண்ணில் நாட்டு விடுதலைக்காகத் தூக்கு மேடையேறிய வீரபாண்டியக் கட்டபொம்மன் புகழ்ந்து பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். ஆனால், இவரின் வீரத்திற்குச் சற்றும் குறையாத விடுதலைப் போராட்டத்தில் தன்னையே அர்பணித்துத் தூக்கு மேடையைத் தழுவிய மருதநாயகம் என்ற மதுரை கான் சாஹிபை நாடு நினைவு கூர மறந்து விட்டது. நாம் எடுத்துச் சொல்லவும் தவறிவிட்டோம். பாளையக்காரர் பலரையும் தன் நண்பர்களாக்கி ஆங்கிலேயர் களுக்குக் கட்டுப்படாமல் அவர்களின் உத்தரவுகளை அலட்சியம் செய்து அவர்களின் கொடியை பீரங்கிவாயிலில் வைத்து சுட்டுத்தள்ளிவிட்டு, தமது கொடியை ஏற்றி துணிச்சலுடன் சுதந்திரப் பிரகடனம் செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் மருதநாயகம் பிள்ளையாக பிறந்து, இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்று, முஹம்மது யூசுஃப் என்ற பெயர் தாங்கியவர் மருதநாயகம் என்ற கான்சாஹிப். இவரை நெல்லூர் சுபேதார், ஈசப், யூசுஃப், யூசுஃப்கான், முஹம்மது யூசுஃப், கான்சாஹிப், கும்மந்தான் இப்படி பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டார்.

1756 மார்ச் 14இல் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் கவர்னராக கான்சாஹிப் நியமனம் பெற்றார். இந்த நிலையில் தான் பாளையக்காரர்களுக்கு ஆதரவாகப் போர் தொடுத்து வந்த மாவீரர் ஹைதர் அலியை நத்தம் என்ற இடத்தில் தோற்கடித்த பெருமை தமிழகத்து கான்சாஹிபைச் சேரும்.

தமிழக வரலாற்றிலேயே இதுவரை நடந்திராத மாபெரும் சுதந்திரப்போர் மதுரை நகரிலே நடைபெற்றது. அந்தப் போரிலே ஆதிக்க வெறிபிடித்த வெள்ளையரும், விடுதலை ஆர்வமிக்க தமிழர்களும் (கான்சாஹிப் தலைமையில்) வெற்றி தோல்விக்கிடமின்றி வீராவேசத்துடன் போரிட்டனர். வருடம் ஒன்றுக்கு மேலாகியும் போர் முடிந்தபாடில்லை.

1764 அக்டோபர் 13ம் நாள் கான்சாஹிபு தொழுகையில் ஸுஜ்துக்குச் செல்லும் வேளையில் நயவஞ்சகமாகப்பிடித்து 1764 அக்டோபர் 15ல் பெரிய மாமரத்தில் தூக்கிலிடப்பட்ட போது மூச்சை அடக்கிப் பழக்கப்பட்ட அவர் இரண்டு முறை திரும்பவும் எழுந்து நின்றார். கடைசியில் அவரே முன்வந்து மரணத்தைத் தழுவிய போது தலையை வெட்டி திருச்சிக்கும், உடல் உறுப்புக்களை மதுரை, தஞ்சை, பாளையங்கோட்டை, திருவாங்கூர் முதலிய இடங்களுக்கும் துண்டாக வெட்டி அனுப்பி வைத்தனர்.

ஏழைக்குடியானவரின் மகனாகப் பிறந்து எந்தச் சுதேசியாலும் சாதிக்க முடியாத அளவிற்குக் கடும் போர் புரிந்த கான்சாஹிப் என்ற சுதந்திர மலரை துரோகத்தாலும், கயமையாலும் கசக்கிப்போட்டார்கள். இம் மாவீரரின் நினைவுச் சின்னமாக அவரது அடக்கஸ்தலம் மதுரைக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தில் சம்மட்டிபுரத்தில் உள்ளது. தென் தமிழகத்தில் உள்ள கான்சா புரம், குமந்தாபுரம் என்ற ஊர்கள் இவரது நினைவாகவே திகழ்கிறது. மாவீரன் மருதநாயகத்தின் வரலாறு நூல்கள் பல வெளிவந்துள்ளது.

பீர்முஹம்மது புலவர்

கலெக்டர் கடவுளுமல்ல. அடிமைப் போலீஸ் கான்ஸ்டபிள் எமனுமல்ல. அல்லாஹ் ரசூலுல்லாஹ்!! இத் தொல்லைகள் அகலுவதும் எந்நாளோ?! இப்பொல்லாத பேய்களெல்லாம் இங்கிலாந்து போவதும் எந்நாளோ? என்று இலட்சிய கீதம் படித்த அன்னார், மதுரை ஆண்டிப்பட்டியில் போலீஸ் சப்- இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர். நாட்டு விடுதலைக்காக வேலையைத் தூக்கி எறிந்துவிட்டுத் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய பாடல்கள் சுதந்திர தாகத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. சுதந்திரப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற இவர் 1945 ஜூலை 13 வெள்ளிக்கிழமை ஜுமுஆவின் பாங்கொலியை கேட்டவாறே காலமானார். ○

தளபதி முஹைதீன்

இவர் திருப்பூர் முஸ்லிம் தெருவில் 1910ல் பிறந்தார். 1929 முதல் 1933 வரை நாட்டு விடுதலைக்காகக் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து அரும்பணியாற்றினார். இடி முழக்கமென மேடைகளில் முழங்கிடும் இவர் தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவர்களுடன் அதிகத் தொடர்பு வைத்திருந்தார். சென்னை துறைமுகம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர். **புத்துலகம்** என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை நடத்தினார். 1983 பிப்ரவரி 22ல் இறைவனடி சேர்ந்தார். ○

காஜாமியான் ராவுத்தர்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியை நிறுவிய காஜாமியான் ராவுத்தர் அவர்கள் இந்திய சுதந்திரப்போரில் அதிகம் பங்கு எடுத்துக் கொண்டவர். கதர் ஆலையை 50,000 ரூபாய் மதிப்பில் நிறுவி சுதேசி இயக்கம் வளர உதவினார். தாய்நாட்டின் விடுதலைக்காக ஏராளமான சொத்துக்களை இழந்தார், அது மட்டுமல்லாமல் அவ்விழப்புக்களை மனமுவந்து ஏற்றுக் கொள்ளவும் செய்தார். எவ்வளவு இழந்தாலும் பரவாயில்லை சுதந்திரம் கிடைத்திட வேண்டுமென்பதையே தனது லட்சியமாகக் கொண்டிருந்தார். ○

விடுதலை வீரர் புலவர் ஆபிதீன்

முஹம்மது ஹுசைன் சுல்தான்கனி தம்பதியரின் புதல்வராக லாகூரில் 1916ல் பிறந்தவர் புலவர் ஆபிதீன் மிகச் சிறந்த கவிஞர் தனது கவிதைத்திறனால்,

மலையாளக்கரைதனிலே இரத்த ஆற்று ஓட்டம்
மாப்பிள்ளைமார் சேவைகளை நினைவுபடுத்திக் காட்டும்
கலையாத சுதந்திரத்தை காத்தது எம் கூட்டம்
கையை நெஞ்சில் வைத்து கூற என்ன வாட்டம்?
பொன்னகரம் டில்லியிலே பகதூர்ஷா ஆண்டான்
பொறுமையோடு சுதந்திரமே பெரிதெனவே கண்டான்
தன்மானப்பிள்ளைகளைப் பலியிடவும் துணிந்தான்

தள்ளாத வயதிலவன் பர்மாவிலே மாண்டான்
பட்டுமிக்க பரம்பரையில் ஹைதரலி பிறந்தான்
பாரதமே மெச்சும்படி நாட்டுத்தொண்டு செய்தான்
வெற்றிமுரசு கொட்டி முதலில் வீரன் திப்பு எழுந்தான்
வெள்ளையனை விரட்ட எண்ணிப் போர்க்களத்தில் மடிந்தான்

என்ற வீர வரிகளை வடித்துக்காட்டி, இந்திய விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம் பெருங்குடி மக்களை வீறு கொண்டு எழச் செய்தார், **"ஈட்டியின் முனையில் நிறுத்தியபோதும் ஈமான் இழக்க மாட்டோம் காட்டிக்கொடுக்கும் கயவர் தம்மை கனவிலும் விடமாட்டோம்"** என்று மார்தட்டி கிளம்பச் செய்த விடுதலைப் போராட்ட வீரர் புலவர் ஆபிதீன் 1966ல் நாகூரில் காலமானார்.

வீரத்திருமகன் முஹம்மது ஹசம்

சுதந்திர போரின்போது உண்மையான நாட்டுப்பற்றோடும் சுதந்திர தாகத்தோடும் போர்க்களத்திலிருந்த முஹம்மது ஹசம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த சுதந்திரப் போர்த் தலைவர்களின் முக்கியக் கடிதங்களை எதிரிகளிடம் அவர் சிக்குவதற்கு முன்பே அழித்தொழித்தார். அவரை எவ்வளவோ துன்புறுத்தியும் அவரிடமிருந்து எந்தவிதத் தகவலும் பெறமுடியவில்லை. எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்ட முஹம்மது ஹசம் 8.6.1800 இல் தனது கழுத்தை தானே வெட்டிக் கொண்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்று அரசு ஆவணங்கள் இன்றும் அந்த வீரத்திருமகனின் வரலாற்றை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

புரட்சியாளர்கள், எந்தவித பாதகங்கள் ஏற்பட்டாலும் பயப்படாமல் தேசத்தொண்டில் சேர துடித்தெழுந்தனர். பச்சமுஹம்மது, அமானுல்லாஹ்கான் போன்றோர் ஈரோடு அருகே பெருந்துறை கிராமத் தலைவர் சின்னக்கவுண்டரிடம் தாங்களாகவே வலியச் சென்று படையில் சேர்ந்து கொண்டார்கள். சேலம் கலெக்டர் உத்தரவுப்படி இராணுவக் கோர்ட்டில் 42 பேர் விசாரிக்கப்பட்டனர். அவர்களில் இரண்டு பிராமணர்கள் ஓரிருவர் இந்துக்கள் மீதி அனைவரும் முஸ்லிம்கள், (இத்தியாகிகளின் பெயர்கள் ‘விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்’ செ. திவானின் நூலில் காணலாம்). இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப்பட்ட இவர்களில் 8 பேரை தாராபுரத்திலும் 7 பேரை சத்தியமங்கலத்திலும் 6 பேரை கோயம்புத்தூரிலும், மீதிப்பேர்களைப் பற்பல இடங்களிலும் கம்பெனியார் தூக்கிலிட்டனர்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதைப் பற்றி மட்டுமே பேசுகிறார்கள், வரலாற்றில் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் முஸ்லிம்களின் இந்தத் தியாக வரலாறோ அரசு ஆவணக் களஞ்சியங்களில் மட்டுமே அடங்கிக் கிடக்கிறது, பாட நூல்களில் கூட இடம் பெறுவதுமில்லை; பேசப்படுவதுமில்லை.

இவர்களைப் போன்று இனந்தெரியாமல் எத்தனை எத்தனை இளம் இஸ்லாமிய வீரர்கள் இத்தரையில் தம் தாய் நாட்டு விடுதலைக்குத் தங்களின் உயிரைத்தாரை வார்த்தார்களோ? நாம் தெரிந்து கொள்ள முயல்வதுமில்லை, அதை பற்றிய அக்கறையுமில்லை. ○

பட்டத்தைத் தூக்கி எறிந்த சையத் முஹம்மத்

இராமநாதபுரம் தொண்டி மாநகரைச் சார்ந்த பீர்முஹம்மத் சுலைஹா பீவி தம்பதியரின் மகனாக 1819ல் பிறந்தவர் விடுதலைவீரர் சையத் முஹம்மத். அவர்கள் இலங்கையில் வணிகம் செய்து பெரும் வணிகரானார். சொந்த ஊரில் ஊராட்சித் தலைவராக இருந்தார். விடுதலைப் போராட்ட பணிகளிலும் ஈடுபட்டார். வெள்ளையர்களை எதிர்த்து “கான் சாஹிப்” என்ற பட்டத்தைத் தூக்கி எறிந்தார். ○

பெரும் தியாகி முஹம்மதுசாலி

நாட்டு விடுதலைக்காக எவ்விதத் தியாகத்திற்கும் தயாராயிருப்பதாகத் திருநெல்வேலி சுப்பராயலு நாயுடுவும், இராமநாதபுரம் முஹம்மது சாலியும் முன் வந்தனர். சென்னைக்குச் செல்லும் முஹம்மது சாலி, சுப்புராயலு நாயுடு இருவருக்கும் பத்மாஸனி அம்மாள் தனது கைக்கொலுசை (சூடகை) அடகு வைத்து பதினைந்து ரூபாய் கொடுத்து அனுப்பினார்.

இரத்தவெறியனான நீலன் சிலையை முதன் முதலாக உடைத்து அவனை அவமானப்படுத்தியது முஹம்மது சாலி என்ற முஸ்லிம் பெருமகனார்.

நீலன் சிலையை உடைத்த ஒருவருக்கு அரசியல் குற்றத்திற்காகக் கடும் குற்றவாளிகளுக்குத் தரப்படும் மாவரைத்தல், கல்உடைத்தல் போன்ற கடின வேலைகள் தரப்பட்டது. அவ்வாறு செய்வது ஏன் என்று கேட்ட போது

குற்றவாளி இழைத்த குற்றம் கொலைக் குற்றம் போன்றது (சிலையை உடைத்தது கொலைக் குற்றமாம்) என்று அதிகாரிகள் பதிலளித்தனர். அப்போது அங்கு கைதியாக இருந்த இந்திய விடுதலை இயக்கத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க தோழர் அமீர் ஹைதர்கான் போன்றோரின் தலையீட்டால் அவருக்கு "சி" வகுப்பு தரப்பட்டு அரசியல் கைதிகளுடன் வைக்கப்பட்டார். அதன் பின் தியாகி முஹம்மதுசாலி அவர்களால் சேதமுற்ற அந்த சிலையினை முற்றிலும் அகற்றும் போர் தொடர்ந்து நடைபெற்றது. இவர் இராமநாதபுரம் ஆதம் ராவுத்தரின் புதல்வராக 27.03.1900ல் பிறந்தவராவார். ○

குடும்பத்துடன் போராடிய கரூர் நன்னா சாஹிப்

விடுதலைப் போரில் உறுதியுடன் போராடியவர், மாபெரும் தேசியவாதி. போராடியதற்காகத் தன் மனைவியுடன் சிறை செல்ல முயன்றபோது அங்கே சப்-கலெக்டராக இருந்த "ஹாகன்" என்பவர், உங்கள் மனைவி முஸ்லிம் பெண்ணாக இருந்தும் இப்படிச் செய்யலாமா. முஸ்லிம் பெண்கள் கோஷா (பர்தா) அணிந்து வாழக்கூடியவர்கள், இப்படிப் போராட்டங் களில் ஈடுபடலாமா எனக்கேட்டபோது, தேசம் வெள்ளையரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறபோது என் மனைவி என்னுடன் சிறைக்கு வருவதில் எந்தத் தவறுமில்லை எனக் கூறி மனைவியுடன் சிறை சென்றார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகப் போலீஸாரின் மிருகத்தனமான தாக்குதலில் பாதிக்கப்பட்டு, இறுதி காலத்தில் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு தலையும் கையும் ஆடிக்கொண்டே இருந்தது. ○

இரத்த வெறியன் நீலன்

1857 புரட்சியினை ஒடுக்கிட லார்டுகானிங் என்பவர் ஐரோப்பியத் துருப்புக்களை இங்கிலாத்தில் இருந்து வரவழைத்ததோடு, பம்பாய், ரங்கூன், சென்னை முதலிய இடங்களில் இருந்தும் ஆங்கிலேயத் துருப்புக்களை வரவழைத்தார்.

ராட்சசத்தனம் பொருந்திய கர்னல் (நீல்) தலைமையில் சென்னையிலிருந்து துருப்புக்கள் காசிக்கு ஜுன் மாதம் வந்தன. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்த அந்தப் புரட்சியில் காசி பேரெழுச்சியாகத் திகழ்ந்தது. காசியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் கிராமங்களிலும் ஆங்கிலேயர் எதிர்ப்பை அடக்கி, ஒழுங்கை நிலை நிறுத்தும் பணியில் நீலன் ஈடுபட்டார். யாதொரு பாதுகாப்பும் அற்ற விவசாயிகள் வாழும் கிராமங்களில் புகுந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்துவது, தூக்கிலிடுவது போன்ற காரியங்களில் ஈடுபட்டார். ஏழை விவசாயிகள், பிராமணர்கள், எவ்வித தீங்கும் செய்யாத முஸ்லிம்கள் அவர்களது கைக்குழந்தைகள், பெண்கள், கிழவர்கள், குருடர்கள், ஊனமுற்றோர், நகர முடியாத கிழவர் என்று ஒருவர் கூட தப்பியோட முடியாமல் கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. தப்பியோட முயன்றவர்களை சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஜெனரல் நீலன் இத்தகைய அக்கிரமங்களைச் செய்த போது டில்லி பாதுஷாவின் பிரதிநிதியான லியாகத் அலி என்ற மவ்லவீ நீலனை எதிர்த்துப் போர் செய்தார். அந்த மவ்லவீயின்

மருமகனார் மக்களுக்குத் தலைமை ஏற்றுப் போர் நடத்தி ஆங்கிலேயருக்கு அச்சம் ஏற்படுத்தினார். பிடிபட்ட அவரைச் சிறையில் அடைத்தபோது மூச்சை அடக்கி வெளியே வந்த அவர், தனது கட்டுக்களை அறுந்திடச் செய்தார். இதை அறிந்த ஆங்கிலேயர் அவரை கட்டிப்பிடித்து கீழே தள்ளி மூளையைச் சிதறச் செய்தனர்.

அந்தக் கொடுமையான காலகட்டத்தில் அடுக்கடுக்காக (மையித்) சவங்களைச் சுமந்து செல்லும் வண்டிகள் காலையில் இருந்து மாலைவரை மூன்று மாத காலம் ஓயாமல் சென்று கொண்டிருந்தது என்று “கே” என்ற ஆங்கில சரித்திர ஆசிரியர் கூறுகிறார்.

ஆங்கில சேனாதிபதி ஹியூ வீலரைச் சுட்டுக் கொன்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டு “ஜாஃபர் அலி” என்ற குதிரை வீரரை தூக்கில் தொங்க விட்டான் நீலன்.

அப்பொழுது “நாயகமே, அடியேன் அல்லாஹ்வின் அடிமை நானோ நிரபராதி! இது சத்தியம். எனக்கு இந்த தண்டனை தந்தவன் நீலன், வயது வந்ததும் நீலனையோ அவனது சந்ததியையோ என் மகன் பழிவாங்க வேண்டும், இதுவே என் (துஆ)பிரார்த்தனை” எனச் சொல்லியவாறே தூக்கிலிடப்பட்டு நாட்டிற்காக உயிரைத் துறந்தார். ○

பெருமைக்குரிய பெண்கள்

வீரமங்கைகள் பீ அம்மா-பேகம் ஸாஹிபா

1853 பிறந்த ஆபாதிபானு பீ அம்மா என புகழ் பெற்ற அவர்கள் புகழ் பெற்ற அலி சகோதரர்களின் தாயார் ஆவார். தம் பிள்ளைகள் இனி ஆங்கிலேய அரசை எதிர்க்கமாட்டார்கள் என்று உறுதியளித்தால் அவர்களை விடுதலை செய்வோம் என்று பிரிட்டிஷார் கூறியபோது தளர்வுற்ற என் கைகளாலேயே அவர்களைக் கொல்வேனே தவிர உங்களின் பேராசையை நிறைவேற்றச் சம்மதிக்கமாட்டேன் என்று முழக்கமிட்டவர் பீஅம்மா.

மவ்லானா முஹம்மது அலியின் மனைவியான பேகம் ஸாஹிபாவும், பீ அம்மாவும் புர்கா அணிந்து கொண்டு கிலாஃபத் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். தன் பிள்ளைகளுக்கு மார்க்க உணர்வையும், சுதந்திர வேட்கையையும் ஊட்டிய தாயாக விளங்கினார். கிலாஃபத் இயக்கத்தின் காரணமாகச் சிறைப்பட்டிருந்த அலி சகோதரர்கள் ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்து தாம் விடுதலை ஆவதற்காக ஏதோ எழுதிக் கொடுத்துவிட்டதாக ஒரு வதந்தியைச் சில விஷமிகள் பரப்பிவிட்டனர். இதை கேள்விப்பட்ட பீ அம்மா அவர்கள் இச்செய்தி உண்மையானால் அவர்கள் சிறையை விட்டு வெளியே வந்தவுடன் நான் தளர்வுற்றிருந்த போதும் தன் கரத்தால் அவர்கள் கழுத்தை நெறுக்கிக் கொல்வேன். அதற்கான ஆற்றலை இறைவன் எனக்குத் தருவான் என நம்புவதாகக் கூறினார்கள். இவர்களின் விடுதலை தாகத்திற்கு இதைவிட வேறு என்ன கூற முடியும். மவ்லானா முஹம்மதலி அவர்கள் காந்தியடிகளுக்கு போர்த்திய கதர் ஆடை பீ அம்மா அவர்கள் தன் கையால் நெய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர இன்னும் பல இஸ்லாமியப் பெண்கள் நாட்டு விடுதலைக்காகப் போராடி உள்ளார்கள். பீ அம்மா அவர்களின் சுதந்திர உணர்வுமிக்க வீர பேச்சைக் கேட்ட இளையான்குடி முஸ்லிம் பெருமக்கள் நாட்டிற்காகத் தங்களது வீட்டுப் பணத்தையும் நகைகளையும் வாரிக் கொடுத்தார்கள். அந்த காலத்திலேயே நாட்டின் விடுதலைக்காக முப்பது லட்சம் ரூபாய் திரட்டித் தந்தார்கள் இஸ்லாமிய பெண்கள்.

செவிலித்தாய் சாந்த் பீவீ

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், சிறந்த சுதந்திரப் போராட்டவீரர், அவரது தாயார், பிறந்ததும் இறந்துவிட்ட சூழ்நிலையில் தாய்ப்பால் ஊட்ட ஆளில்லாத போது அவருக்குத் தாய்ப்பால் ஊட்டி வளர்த்த பெருமை சாந்த் பீவீ என்ற இஸ்லாமியப் பெண்ணையே சாரும். இதன் நன்றிக்கடனாக அந்தத் தாயை தனது வாழ்நாள் முழுவதும் போற்றிப் புகழ்ந்தார் பசும்பொன் தேவர் திருமகனார்.

ஆனால் இன்று இந்த தேவரின் நினைவு நாளை முன்னிட்டு ஆண்டு தோறும் சில தீய சக்திகள் பொதுமக்களிடம் ஒருவித பதட்ட நிலையை ஏற்படுத்தி பெரும் கிளர்ச்சி செய்துவருவது நியாயவான்களைக் கவலையடையச் செய்கிறது.

பியாரி பீவி

இவர் விடுதலை வீரர் கரூர் நன்னா ஸாஹிபின் துணைவியார். 1932ல் காங்கிரஸில் இணைந்து 1940ல் தனி நபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி கடலூர்-வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்டார். ○

இந்திய சுதந்திரப்போர் பற்றி ...

உலகறிய வெளிச்சம்போட்டுக்காட்டவேண்டும்

❑ *பேரறிஞர் அபுல்ஹஸன் ஷாதுலி ஹஸ்ரத் (ரஹ்)*

இந்தியா சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பு ஆங்கிலேயருக்கு எப்படியோ அடிமைப்பட்டுவிட்டது. இந்த அடிமைத்தளையை அகற்றிச் சுதந்திர இந்தியாவாகத் திகழ பெரும் பெரும் தியாகங்கள் செய்ய வேண்டியிருந்தது. இதற்காகப் பல புரட்சிகள் ஏற்பட்டன. துப்பாக்கி ஏந்திப் போரிட வேண்டிய கால கட்டங்களும் வந்தன.

பிரிட்டிஷாரின் சோல்ஜர்களாக இருந்தவர்களே அரசை எதிர்த்து போர் முழக்கம் செய்தனர். வட இந்தியாவை விட தென்னிந்தியா மிகப் பெரிய போர் ஒன்றை நடத்தியது. அதுதான் மலபார் புரட்சி. இதில் எண்ணற்ற முஸ்லிம் மக்கள் பிரிட்டிஷாரால் குண்டுகள் வீசியும், பீரங்கியால் தாக்கியும் அழிக்கப்பட்டார்கள். பல்லாயிர மக்கள் சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டுப் பலர் சென்னை இராஜதானியிலும் பல்வேறு மத்தியசிறைச் சாலைகளிலும் தூக்கிலிடப்பட்டார்கள்; எண்ணற்றோர் நாடு கடத்தப்பட்டு அந்தமான் தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொடுமை செய்யப்பட்டார்கள். இப்படிப் போர் நடத்தியவர்களில் முஸ்லிம்கள் கணக்கற்றோர்.

விஷப் பாம்புகளை விடக் கொடிய பகைவர்களால் அன்னியர்களாக முஸ்லிம்கள் சித்தரிக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் இச்சமுதாயத்தின் தன்மானத்தை, கௌரவத்தை, தேசப்பற்றை உலகறிய வெளிச்சம் போட்டுக் காட்டும் மகத்தான சமுதாயப் பணிகளைச் செய்யவேண்டியது நமது தலையாய கடமையாகும்.

சுதந்திரம் ஒருவரால் கிடைத்ததா?

❑ *சொற் செல்வர் – சி.சு. மணி*

இந்திய சுதந்திரம் ஒருவரால் 'வாங்கித்' தரப்பட்டது என்று நம்புபவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அரசின் விளம்பரச் சாதனங்கள் கூட அப்படித்தான சொல்லுகின்றன.

"ஒருவரால் அன்று; அந்த ஒருவரோடு இணைந்து நின்று ஒரு குடும்பத்தால் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது" என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

கத்தியின்றி ரத்தமின்றி வந்ததன்று சுதந்திரம், செந்நீர் சிந்தியவர்களின் முகங்களும் பெயர்களும் பட்டியலிட்டுக் காட்டுவதற்கு அடங்காதவை.

விடுதலைப்போர் வீரர்களில் பலர் மறக்கப்பட்டனர் என்பதை விட மறைக்கப்பட்டனர் என்பதே உண்மை. மதங்கள் கடந்து, மாநில எல்லைகளைக் கடந்து மொழிவேற்றுமை களைக் கடந்து இந்திய விடுதலை இயக்கம் காலத்துக்குக் காலம், தன் அணுகு முறைகளை மாற்றிக் கொண்டு நடைபெற்றது. இதுவே உண்மை.

விடுதலைப் போரில் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் பங்கேற்றனர். ஆயினும் ஆங்கிலேயர் வருகையால் தங்கள் ஆட்சியைப் பறி கொடுத்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஆத்திரம் மூண்டு அவர்கள் விடுதலைப் போரில் வேகமாகப் பங்கு கொண்டனர் என்பதை மறக்க முடியாது மறுக்கவும் முடியாது.

இஸ்லாமிய மெழுகுவர்த்திகள்

❑ *வரலாற்று ஆய்வாளர், பன்னூல் ஆசிரியர்– செ. திவான்*

சூரியனே அஸ்தமிக்காத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தைத் தகர்த்து, ஆங்கிலேயர் ஆட்சியை நம் தாய் நாட்டினின்றும் விரட்டியடிக்க வீறு கொண்டெழுந்து விடுதலை வேள்வியில் தங்களைப் பலியாக்கிக் கொண்டு வாழ்க்கைச் சுகங்களையும் வசதிகளையும் தியாகம் செய்த முஸ்லிம்கள் கணக்கற்றோர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பங்கு வகித்தார்கள். பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்திடவும், தேசிய அளவிலும் மாநில அளவிலும் தியாகங்கள் பல புரிந்து இந்நாட்டைப் பாதுகாப்பதிலும் அவர்கள் முன்னணியில் நின்றவர்கள். இன்றும் நிற்பவர்கள் இனி என்றுமே நிற்பார்கள்.

வீட்டை மறந்து, நாட்டை நினைத்து, தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக் கொண்டு, இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் ஈட்டித் தந்தனர் நம் முன்னோர்கள். ஈடுஇணையற்ற அந்த தியாக சீலர்களின் ரத்தத்தால் சிவப்படைந்த இந்திய தேசியத்தைத் தம் மதவெறியால் கறைபடுத்திக் காவியடைச் செய்திடக் கங்கணம் கட்டிக் கொண்டு அயோத்திகளையும் குஜராத்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்.

சுதந்திரமும், சுயமரியாதையும் இரு கண்கள் எனக் கருதக்கூடிய இந்நாட்டு முஸ்லிம்களின் கடந்த கால வரலாறு அவர்கள் கண்களைத் திறக்கட்டும்.

உயிர் நீத்த முஸ்லிம்கள்

❑ ***நாடறிந்த அறிஞர், தேசியவாதி – குஷ்வந்த் சிங்***

இந்திய நாட்டின் விடுதலைக்காகச் சிறை சென்றவர்களிலும். உயிர்ப் பலியானவர்களிலும் முஸ்லிம்கள் அதிகம் இருக்கின்றனர். அவர்கள் தமது மக்கள் தொகை விகிதத்தைவிட நாட்டு விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முஸ்லிம்கள் விகிதம் அதிகமாக இருந்தது.

உண்மையான திருமக்கள்

❑ ***அறிஞர் டாக்டர் ஜேம்ஸ்***

இந்தியத் திருநாட்டின் உண்மையான திருமக்கள், அதிக உரிமை கொண்டவர்கள் இஸ்லாமியர்கள் தான். அவர்கள் தான் நாட்டின் விடுதலையில் பெரும் பங்குவகித்தனர்.

இந்திய விடுதலையைப் பெரும்பாலும் முஸ்லிம்களே பெரிதும் விரும்புகின்றனர். தங்கள் சதவீதத்தில் 50க்கும் அதிகமான நபர்கள் போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர். இவர்களுக்கு விடுதலை தாகத்தை இஸ்லாமிய மார்க்க அறிஞர்களான உலமாப்பெருமக்கள் ஏற்படுத்துகின்றனர் என்று எழுதினார்.

தெரிந்துகொள்ள சில செய்திகள்

இந்தியாவில் முதல் இறையில்லம்

கி.பி. 643ம் ஆண்டு ஜுன் 7ம் தேதி கேரளா மாநிலத்தில் உள்ள காசர் கோட்டில் மாமேதை மாலிக் பின் தீனார் (ரஹ்) அவர்கள் பல தரப்பு மக்களிடம் நிதி வசூல் செய்து ஒரு பள்ளிவாசல் கட்டினார்கள். அதுவே இந்திய மண்ணில் கட்டப்பட்ட முதல் பள்ளியாகும்.

கி.பி. 738ம் ஆண்டில் திருச்சி மாநகரின் மெயின் கார்டுகேட், கோட்டை ரயில் நிலையம் அருகிலுள்ள பள்ளிவாசல் கட்டப்பட்டது. இது தமிழகத்தில் கட்டப்பட்ட முதல் பள்ளியாகும்.

தமிழகத்திற்கு "வலிமார்கள்" வருகை

மஹான் பாபா நத்ஹர் வலி [ரஹ்], திருச்சி.

கி.பி. 834 ஆண்டிற்குபின் சுமார் 700 கலந்தர்களை உருவாக்கி அழைத்துக் கொண்டு தமிழகம் முழுவதும் தவ்ஹீத் சன்மார்க்கப் பிரச்சாரம் செய்து மக்களை நல்வழிபடுத்தி இறுதியில் திருச்சி மாநகரில் மையப் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டார்கள். கி.பி. 969 முதல் 1039 வரை அன்னாரின் மார்க்கப்பணி தொடர்ந்து நடந்தது.

மஹான் சுல்த்தான் சையத் இப்ராஹீம் ஷஹீத் [ரஹ்] ஏர்வாடி.

ஹிஜ்ரீ 53ல் மொராக்கோ நாட்டில் பிறந்து நபி (ஸல்) அவர்களின் உத்தரவின் பேரில் இந்தியா வந்து இஸ்லாமிய மார்க்கத்தைப் போதித்தார்கள். பாண்டிய மன்னர்களின்

கடுமையான எதிர்ப்பைச் சந்தித்து, பின்னர் அவர்களுடன் ஏற்பட்ட போரில் தாக்கப்பட்டு வீரமரணம் அடைந்து ஷஹீதானார்கள். இராமநாதபுர மாவட்டம் ஏர்வாடியில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

மஹான் பாபா ஃபக்ருத்தீன் [ரஹ்], காட்டுபாவா பள்ளிவாசல்.

தென்மாவட்டங்களில் காட்டு பாவா ஸாஹிப் என அழைக்க படும் பாபா ஃபக்ருத்தீன் (ரஹ்) அவர்களும் மதுரை மாநகரில் ஹள்ரத் அலியார்ஷா ஸாஹிப் அவர்களும் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து மார்க்கத்தைப் பரப்பினார்கள்.

மஹான் ஷாஹுல் ஹமீது [ரஹ்], நாகூர்.

கி.பி. 16ம் நூற்றாண்டில் தமிழகத்தில் நாகூரில் அடங்கப்பெற்ற ஷாஹுல் ஹமீது நாயகம் (ரஹ்) அவர்கள் மார்க்கப் பணி செய்து இஸ்லாமிய ஒளியைப் பரவச் செய்தார்கள்.

மரைக்காயர், லப்பை, ராவுத்தர் என்றால் என்ன?

“மர்க்கப்” என்றால் கப்பலை குறிக்கும் அரபுச் சொல்லாகும். கப்பலில் அல்லது மரக்கலத்தில் பயணம் செய்து வந்தவர்கள் என்பதால் பிறமக்களால் மரக்கலராயர் என அழைக்கப்பட்டு பின்னர் அதுவே மரைக்காயர் என்றாகிவிட்டது.

இஸ்லாமியப் பணிகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும் லப்பைக் (இதோ வந்துவிட்டேன்) என்ற அரபுச் சொல்லை அதிகமாகப் பயன்படுத்தியதால் அவர்களை ‘லப்பை’ என அழைக்கப்பட்டு அதுவே இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

ராவுத்தர் என்பது குதிரையை அடக்கியாளும் ஆற்றலுடையவர்கள் என்ற பொருள் கொண்ட சொல்லாகும். குதிரை வியாபாரத்திற்காக வந்தவர்களை இராவுத்தர் என அழைக்கப்பட்டது. அதுவே இன்றும் வழக்கில் உள்ளது.

தாதா அப்துல்லாஹ் கம்பெனியாரின் வழக்கில் வாதாடுவதற்காக 1893 ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்ற இந்திய வழக்குரைஞரான மோகன்தாஸ் கரம்சந்த் என்ற காந்தியடிகளார், தென்னாப்பிரிக்காவில் விடுதலைக் கிளர்ச்சியை நடத்தி பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி சத்தியாகிரக வழியில் நடைபோட்டுவிட்டு 1916 ஜூலை 18ல் இந்தியா வந்து சேர்ந்தார். அவர் இந்தியா வந்தபோது இந்திய அரசியலில் ஒரு சூன்யநிலை நிலவியிருந்தது. அதைத் தனது வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். இந்திய அரசியலில் நுழைந்து வேகமாக வளரத் தொடங்கினார். அகில இந்திய காங்கிரஸ் சபைக்குப் புத்துயிர் ஊட்டினார். இந்திய நாட்டின் விடுதலைக்காக பல்லாண்டுகளாக போராடிக்கொண்டிருந்த முஸ்லிம்களுடன் இணைந்து போராட ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அவராலேயே நாடு சுதந்திரம் பெற்றது என்று பேசப்படும் அளவிற்கு அந்த சந்தர்ப்பத்தை மிகச்சரியாக பயன்படுத்திக் கொண்டார்.

“மஹாத்மா” என்ற பட்டத்தை வழங்கியது யார்?

ஹுஸைன் அஹ்மத் மதனீ (ரஹ்) என்ற இஸ்லாமியப் பேரறிஞர்தான் இவருக்கு மஹாத்மா என்ற பட்டத்தைச் சூட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் விடுதலைக்கும் தேச நலனுக்கும் பாடுபட்ட மஹாத்மாவை தேசவிரோத சக்திகளின் தூண்டுதலால் நாதுராம் கோட்சே என்ற இந்து மத வெறியன் சுட்டு கொன்ற செய்தி உலகறிந்ததாகும். தற்போது இந்த செய்தி கொஞ்சம் கொஞ்சமாக மறைக்கப்பட்டு வருகிறது.

அன்றைய ரவ்லட்டும், இன்றைய பொடாவும்...

1918 டிசம்பர் 17ல் எஸ்.ஏ.டி. “ரவ்லட்” என்ற நீதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன் 15.4.1919ல் அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அதில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோரை நசுக்க, மனஉறுதியைக் குலைக்க, ஒரு சட்டம் தேவை, அதில் எந்த வீட்டையும் போலீஸார் வாரண்டு இல்லாமல் சோதனை செய்யலாம். புரட்சியாளர் என போலீஸாரால் சந்தேகப்படும் நபரைக் கைது செய்யலாம்.

விசேஷ நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு குற்றங்கள் நிரூபிக்கச் சாட்சி இல்லாவிட்டாலும் தண்டனை தரலாம். விசாரணை, தண்டனைகளை ரகசியமாகச் செய்யலாம், மேல் முறையீடு எதுவும் செய்யக் கூடாது, போன்ற விசயங்கள் முக்கியமாக இடம் பெற்றிருந்தது.

இந்தச் சட்டத்தை காந்தி கண்டித்தார். 1919 ஏப்ரல் 6-ம் தேதியிலிருந்து நாடெங்கும் **ஹர்த்தால்** நடைபெற்றது. ஆனால்,நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்கு பின் சுதந்திர நாட்டில் வேறு பெயர்களில் இது மாதிரி அல்லது இதைவிட கடினமாகச் சட்டங்கள் வந்து கொண்டிருப்பது நாமறிந்த செய்தியாகும். சமீப காலத்தில் வந்த சட்டங்கள் தடாவும், பொடாவும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பலரும் கூறுவது போல் இந்திய சுதந்திரப் போரில் நாம் "பங்கு" வகிக்கவில்லை, மாறாக விடுதலைப் போரை முதன்முதலாக துவக்கியது-தொடர்ந்து நடத்தியது உயிர்களையும் உடமைகளையும் பெருமளவில் இழந்தது எல்லாம் நாம்தான். ஆங்கிலேயர்களின் கணக்குப்படியே இருபத்தைந்து வருடத்தில் ஏழு லட்சம் ஆலிம்களும் முஸ்லிம்களும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். எனவே யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத அளவிற்கு இந்திய விடுதலைப் போரில் இஸ்லாமியர்களின் பங்கேற்பு சிறப்பானதாகவும் மகத்தானதாகவும் இருந்தது. இந்திய நாட்டின் விடுதலைக்காக இஸ்லாமியர்கள் செய்த ஈடுஇணையற்ற தியாகங்களை நியாயவான்கள், உண்மையாளர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக... 50 ஆண்டுகாலமாக நமது சுதந்திர உணர்வுகளையும் பட்ட துயரங்களையும், மக்களுக்கும் நம் தலைமுறையினருக்கும் எடுத்துச் சொல்லாதது, நாம் செய்த மிகப்பெரிய தவறாகும். எனவே இனிவரும் ஒவ்வொரு சுதந்திர தின, குடியரசு தினக் காலங்களிலும் நமது தியாகங்களை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டியக் கடமை நம் எல்லோருக்கும் உண்டு. விடுதலைக்கு நம் முன்னோர் தியாகம் செய்தது போல நாட்டின் வளர்ச்சிக்காக நாம் என்றும் துணை நிற்போம், அல்லாஹ்வின் அருளும் உதவியும் என்றும் நம்பக்கமே!